



# தமிழரசு

ஜூலை 16-31, 1998 ரூ.3









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஒட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98



# தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

## அட்டைப் படம்

### முதல் அட்டை

சென்னையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் அவர்கள்.

### நான்காம் அட்டை

10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் மாநில - மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 235 மாணவ - மாணவிகளுக்கு மேல்படிப்புச் செலவை அரசே ஏற்கும் விழா.

## திருக்குறள்

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.*

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

*(கலைஞர் உரையிலிருந்து...)*


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆடி
ஜூலை 16-31, 1998
மலர் : 29 இதழ் : 2
விலை ரூ.3




# "இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர்க்கான உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதில் தமிழக முதல்வரின் தொலைநோக்குப் பார்வை வெகுவாகப் பாராட்டுக்குரியது!"

- குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் உரை

"இந்தத் தொழில்நுட்ப மையத்தை இன்றைக்கு நான் துவக்குவதிலும் பெண்கள் தொழில் முனைவோர்களுக்கான உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான கால்கோளை அமைப்பதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## முதலமைச்சருக்குப் பாராட்டு

இந்திய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறை மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான முயற்சியில் ஈடுபட்டதற்காகத் தமிழக முதலமைச்சரை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் தலைவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளனர். மகாத்மா காந்தி அடிகளும், பிரதமர் நேருவும் இயற்கைச் சூழலை வலியுறுத்தியுள்ளனர்.

வாய்ப்பிற்கான வசதிகள் ஏராளமாக உள்ளதைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் தெரிவிக்கலாம். இந்த ஆய்வுமையக் கட்டடத்திலும் அருகாமையில் உள்ள கட்டடத்திலும் சூரிய சக்தி மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி, அங்குள்ள கணிப்பொறிகளை எவ்விதத் தடங்கலும் இன்றிச் செயல்பட வைக்கின்றனர். இதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## தமிழக அரசைப் பாராட்டுகிறேன்

சூரிய ஒளி மூலமும், காற்றாடி மூலமும் மின்சாரம் உற்பத்தி செய்வதில் முன்னணியில் இருந்துவரும் தமிழக அரசை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். மரபு சாரா எரிசக்தி துறையையும் இதற்காக நான் பாராட்டுகிறேன்.

இயற்கை வளத்திற்கு குறிப்பாகத் தண்ணீர் உபயோகத்திற்கு மத்திய அரசு அதி முக்கியத்துவம் கொடுத்து வருவதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதேசமயம் மாறிவரும் மழையின் அளவால் எதிர்பாராத சூழல்கள் இந்தியாவில் ஏற்பட வாய்ப்புள்ளது. அதை எதிர் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளைச் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். தண்ணீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்வதற்காகத்தான் பஞ்சாயத்து ராஜுக்கு (உள்ளாட்சி மன்றங்களுக்கு) அதிகாரம் அளித்துள்ளோம்.

## பூங்காவிற்கு அடிக்கல்

இங்கு மைய அரசுடன், மாநில அரசும், சுவாமிநாதன் ஆராய்ச்சி மையமும் ஒருங்கிணைந்து ஏற்படுத்தியுள்ள இந்த மகளிருக்கான பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டுவதற்காக, என்னை அழைத்த தமிழக முதலமைச்சருக்கு எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




உயிர்தொழில் நுட்பவியல் துறையில், குறிப்பாக உடல் பாதுகாப்பு, வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி செய்து, வளர்ச்சி பெறச் செய்வதில் அரசு முக்கிய முயற்சிகளை எடுத்துள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர்க்கு, மகளிர் தொழில் முனைவோர்க்கு, மகளிர் தொழில்நுட்பத் துறையினர்க்கு, பெண் விஞ்ஞானிகளுக்கு என அனைத்துத் தரப்பு மகளிர்க்கும் முறையான பயிற்சி அளிப்பதில் உலகிலேயே முதன் முறையாக இந்த சென்னை உயிர் தொழில்நுட்பவியல் நிலையம் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழும். அந்த வகையில் மற்ற முக்கிய நகரங்களுக்குச் சென்னை ஒரு எடுத்துக்காட்டாகத் திகழும் என நான் நம்புகிறேன்.

இந்த சென்னை உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா சுற்றுச் சூழலுக்குச் சிறந்து விளங்கும் என்பதிலும், புதிய யுக்திகளுடன் விவசாயிகள் போதிய வாய்ப்பு இல்லாத நிலையிலும் அதிகம் உற்பத்தி செய்ய ஒத்துழைப்பு நல்கும் என்பதிலும் நம்பிக்கை கொண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மகளிர் தொழில் முனைவோர்க்கு உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதில் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்ட தமிழக முதல்மைச்சரை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

*- மேதகு குடியரசுத்தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள் மகளிர் உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டியும், ஜெ.ஆர்.டி.டாடா தொழில்நுட்ப மையத்தைத் துவக்கிவைத்தும் ஆற்றிய உரை.*

# உயிர் தொழில்நுட்பம் - தகவல் தொடர்புத் துறைகளுக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

- முதலமைச்சர் **கலைஞர்**

"தமிழ்நாட்டிற்கு இன்று ஒரு முக்கியமான நாளாகும். இந்திய நாட்டில் மகளிருக்கென்று முதன்முதலாக உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா ஒன்று இங்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முன்னோடித் திட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டுவது நமது மகிழ்ச்சியை மேன்மேலும் பன்மடங்காக்குகிறது.

மகளிருக்கான இந்தத் தொழில் நுட்பவியல் பூங்காவை அமைப்பதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்ததற்காக மத்திய அரசையும், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தையும், "டிட்கோ" நிறுவனத்தையும், நான் பாராட்டுகிறேன்.

நமது நாட்டின் சுதந்திரதினப் பொன்விழா ஆண்டில், இந்த உயர் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுவது மிகவும் சாலப் பொருத்தமுடையதாக உள்ளது.




மகளிருக்கென்றே தனியாக உயிர் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றை அமைப்பது குறித்து, தமிழ்நாடு அரசின் ஆதரவைக்கோரி, டாக்டர் சுவாமிநாதன் கடந்த ஆண்டு என்னைச் சந்தித்தபோது, இது உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும் எனக் கருதி நான் ஆணையிட்டதை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றை வெற்றிகரமாக நிர்வகிப்பதில் நம் மகளிருக்குள்ள திறமை குறித்து எவ்வித ஐயப்பாடும் யாருக்கும் இல்லை. இது மகளிர், தங்களுக்குள் புதைந்து கிடக்கும் தனித்தன்மைகளை வளர்த்து, தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவும் என நான் நம்புகிறேன்.

டாக்டர் சுவாமிநாதன் அவர்கள், இத்திட்டத்தைத் தொடரவும், பணிகளை மேற்கொள்ளவும் ஊக்கமளிக்கும் வகையில் இத்திட்டத்திற்காக, இருபது ஏக்கர் நிலம் உடனடியாக ஒதுக்கப்பட்டது.

*27.3.1998* அன்று *1998-99* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்தப் பூங்காவை அமைத்திட டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு இந்த அரசு உதவும் என்று நான் அறிவித்திருந்தேன்.

தமிழ்நாடு அரசின் சார்பில், "டிட்கோ" நிறுவனம் இத்திட்டத்திற்குப் பங்கு மூலதனத்தை அளித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் டிட்கோ உதவி வருகிறது. தமிழ்நாடு அரசும் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தை வழங்கியுள்ளது.

இந்திய மனிதவள அமைச்சர் மாண்புமிகு டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அவர்கள், இந்திய அரசு உயிர் தொழில் நுட்பவியல் துறையின் மூலம், பெண்களுக்கென்றே இந்த உயிர் தொழில் நுட்பப் பூங்காவை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாட்டை முதலாவது மாநிலமாகத் தேர்ந்தெடுத்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களுக்கான, பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா என்ற பெயரில் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நிறுவனத்தில் பத்து கோடி ரூபாய்க்கும் கூடுதலாக முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா சுமார் 1,000 மகளிருக்கு வேலை வாய்ப்பை அளிக்கக் கூடும் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனம், 10 ஆண்டுகள் என்ற குறுகிய கால அளவில் மிகப் பெரியதோர் ஆராய்ச்சி அமைப்பாக வளர்ந்துள்ளது.

ஜப்பான் நாட்டின் "அசஹர் கிளாஸ் பவுண்டேஷனிடமிருந்து" "புளூ பிளாண்ட்" பரிசை 1996 ஆம் ஆண்டில் ஆசியாவிலேயே முதன்முதலாகப் பெற்றது, இந்த நிறுவனமாகும். இந்நிறுவனம், புதிய தொழில்நுட்பப் புதுமைகளுக்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையே உயரிய நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையும் நான் அறிகிறேன்.

சமுதாய ரீதியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள பிரிவு மக்களுக்கு, அறிவியல் ஆய்வின் பலன்கள் கிடைக்கச் செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

மகளிர் - குழந்தை நலன்தொடர்பான பணிகளுக்கும், பசிப்பிணியை அறவே நீக்கும் பணிகளுக்கும் இந்த ஆராய்ச்சி மையம் முன்னுரிமை அளிக்கிறது.

சுவர்களுக்குள் மட்டும் முடங்கிக் கிடக்காமல், பரந்த கருத்துக்களுடன் இந்த ஆராய்ச்சி மையம், மிகவும் புதிய அணுகுமுறையுடன் செயல்பட்டு வருகிறது. அதனை இந்த ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகள் கிராமங்களுக்கும், பல நிறுவனங்களின் மூலமாகச் சென்றடைவது புலப்படுத்துகிறது.

தேசியப் பன்னாட்டு, பொது மற்றும் தனியார் அமைப்புகள் இம்மையத்திற்கு நிதி வழங்குகின்றன.

இம்மையம் பல்வேறு தேசிய, பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பெற்றுள்ள அங்கீகாரமே இதற்குக் காரணமாகும்.

இந்திய குடியரசுத் தலைவர், ஜே.ஆர்.டி. டாட்டா உயிர் வாழ்க்கைச் சூழல் தொழில் நுட்ப மையத்தைத் தொடங்கி வைக்கும் இந்நிகழ்ச்சியில் நானும் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாடு அரசும் இம்மையத்திற்காக இரண்டு ஏக்கர் நிலம் அளித்துள்ளது.

பாரம்பரியத் தகவல் தொடர்பு முறைகளுடன் நவீன முறைகளையும் இணைத்து இம்மையம் பயிற்சி அளிக்கக்கூடிய வசதிகளை உருவாக்கும் என்றும் நான் அறிகிறேன்.

கணினி அடிப்படையிலான பயிற்சியும், அத்துடன் மரபு வழி மக்கள் தொடர்பு முறையை இணைத்து இந்த ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளக்கூடிய பயிற்சி முறை தமிழ்நாட்டில் பின்பற்றப்படுவதற்குப் பொருத்தமான முறையாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

சுற்றுச்சூழல் கெடுதல், மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் இவை போன்றவை உட்பட சில சமகாலத்து வளர்ச்சி நிலையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு, நிரந்தரமான நிவாரணத்தைப் பெற்றுத் தருவதில் இந்த ஆராய்ச்சி மையம் உறுதியுடன் இருக்கும் என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மையத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக தாராளமாக நிதி உதவி வழங்கியுள்ள திரு. சூராப்ஜி டாட்டா அறக்கட்டளைக்கும், மக்களின் முன்னேற்ற நடவடிக்கைகள் - ஊரகத் தொழில் நுட்பவியல் அமைப்புக்கும்

மகளிர்க்கான பொன்விழா உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவிற்கான கால்கோள் விழாவும், ஜெ.ஆர்.டி.டாடா சூழல் தொழில்நுட்ப மையத் துவக்க விழாவும் 29.7.98 அன்று தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் நடந்தது.

விழாவிற்கு மேதகு ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி தலைமை ஏற்றார்.

தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் எட்டாவது ஆண்டறிக்கையை வெளியிட, குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அதைப் பெற்றுக்கொண்டார்.

நிறைவாக - குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன் மகளிர் உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டியும் ஜெ.ஆர்.டி.டாட்டா சூழல் தொழில் நுட்ப மையத்தைத் துவக்கி வைத்தும் உரையாற்றினார்.




எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டாண்மை நடவடிக்கைகளிலும், ஆராய்ச்சிகளிலும் பங்கு கொள்வதன் மூலம், இந்த மையம், வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடிய முறைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

நம்முடைய கிராமப் புறங்களில் காணப்படும் கருத்துப் பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்திக் கருத்துக்களைப் பரப்புவதில் ஒரு புதிய முயற்சியை இந்த மையம் உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு அரசு, தொழில்மயமாக்கும் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

எனவே, அடுத்த நூற்றாண்டில் நம் நாட்டை முன்னணியில் நிறுத்தக்கூடிய இரண்டு எழுச்சிமிகு துறைகள் - உயிர் தொழில்நுட்பவியல் துறையும், தகவல் தொழில்நுட்பவியல் துறையுமே என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

இவ்விரு துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலுமுள்ள சிறந்த தொழிலதிபர்கள் இத்துறைகளில் முதலீடு செய்து, சாதனை படைக்க, நாங்கள் என்றும் உண்மையான உள்ளார்ந்த ஆதரவை அளிப்போம் என்ற உறுதியை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டின் கடைசி இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாடு 1999-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், சென்னையில் நடைபெறும் என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

அண்ணா பல்கலைக்கழகம் முன்நின்று நடத்தும் இந்த மாநாட்டின் வெற்றிக்கு அனைத்து ஆதரவையும் இந்த அரசு அளிக்கும்.

ஆக்கப்பூர்வமான, பயனளிக்கத்தக்க கூட்டாண்மை ஒன்றை நாம் உருவாக்குவோம். அது அனைவருக்கும் பயனளிப்பதோடு, தமிழ்நாடு வளமுடைய மாநிலமாக மாறுவதற்கும் வழிவகுக்கும்.

இந்த உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவை அடுத்த ஆண்டில் தொடங்கி வைக்க நான் விழைகிறேன். இனிவரும் ஆண்டுகளில் இந்த ஆராய்ச்சி மையமும், இது தொடர்புடைய மற்ற அமைப்புகளும் பெரும் வெற்றி பெற நான் வாழ்த்துகிறேன்.

இந்த சிறப்பு வாய்ந்த மையங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுகின்ற இந்த பவுண்டேஷன்கள் எல்லாமே குடியரசுத் தலைவருடைய பரந்த உள்ளம் போல் விரிந்து பெருகி, குறிக்கோளில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு என் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.



# கலைஞர் ஆட்சியில் தழைத்தோங்கும் தருமபுரி மாவட்டம்

*கோடையிலே*
*இளைப்பாறிக்கொள்ளும்*
*வகைகிடைத்த குளிர் தருவாக...*
*தரு நிழலாக...*
*நிழல் கனிந்த கனியாக...*
*ஓடையிலே ஊறுகின்ற*
*தீஞ்சுவைத் தண்ணீராக...*
*உகந்த தண்ணீரிடை மலர்ந்த*
*சுகந்த மணமலராக...*
*மேடையிலே வீசுகின்ற*
*மெல்லிய பூங்காற்றாக...*
*மென்காற்றில் விளைசுகமாக...*
*சுகத்திலூறும் பயனாக...*

ஆறுகோடித் தமிழர்கள் வாழும் அன்னைத் தமிழகத்தின், அற்புதத் தலைவராம் முத்தமிழறிஞர் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் தருமபுரி மாவட்டம் பெற்ற சிறப்புகள் அளவற்றவை. மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி மாவட்டம், முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் பல்வேறு வழிகாட்டும் வளர்ச்சித் திட்டங்களால் வளம்பெற்று வருகிறது.

**கலைஞரின் சிந்தையில் உதித்த சமத்துவபுரம்**

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினைபொட்டி, அனைத்து மதத்தினரும், அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் ஒற்றுமையோடு, நல்லிணக்கத்துடன் வாழ்ந்திட வழிவகுக்கும் முதலமைச்சர் **கலைஞரின்** சிந்தையில் உதித்த சமத்துவபுரம் திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திற்கே



திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள்
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

வழிகாட்டும் திட்டமாகத் தமிழகம் முழுவதும் விரைந்து செயலாக்கம் பெறுகிறது. இதனடிப்படையில் தருமபுரி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் சமத்துவபுரம் உருவாக்கப்படுகின்றது.

பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் அரூர்-சேலம் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அலமேலுபுரத்தில் 9.57 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு சமத்துவபுரம் உருவாக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

ஒசூர்-பாகலூர் நெடுஞ்சாலையை ஒட்டி, ஒசூர் நகரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள நல்லூர் கிராமத்தில் 17.40 ஏக்கர் நிலத்திலும் சமத்துவபுரம் உருவாக்கும் பணிகள் நடைபெறுகிறது.

இந்த இரு சமத்துவபுரங்களிலும் 5 செண்ட் வீதம் 100 வீட்டு மனைகள் அமைக்கப்பட்டு ஆதிதிராவிடர்கள் 40, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 25, பிற்படுத்தப்பட்டோர் 25, இதர வகுப்பினருக்கு 10 என்ற விகிதாச்சார அடிப்படையில் பயனாளிகள் குடியமர்த்தப்படுவார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் அரசு மானியமாக ரூ.35 ஆயிரமும், பயனாளிகளுக்குக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வட்டியில் ரூ.20 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ.55,000 மதிப்பீட்டில் ஒவ்வொரு வீடும் 327 சதுர அடியில் தருமபுரி கட்டிட மையத்தின் மூலம் கவினுற உருவாகி வருகிறது.

## அடிப்படை வசதிகள்

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 3 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டி, நீரேற்றும் அறை கட்டி முடிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை, ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் பூங்கா ஆகியவை அமைக்கப்படுகின்றன. ரூ.5 இலட்சத்தில் சமுதாயக் கூடம் அமைக்கப்படுகிறது. தொலைக்காட்சிப் பெட்டி அறை ரூ.20 ஆயிரத்திலும், நூலகம் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரத்திலும், சத்துணவுக் கூடம் ரூ.1 இலட்சத்து 30 ஆயிரத்திலும், குடிமைப்பொருள் வழங்கு கடை ரூ.1 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பீட்டிலும், துவக்கப்பள்ளிக் கட்டடம் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் இந்த வகையில் தலா 24 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் அரசு மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இப்பணிகள் துரிதகதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதியுதவித்திட்டம்:

பெண்களின் முன்னேற்றத்திற்கென மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் 1989-90ல் வழிகாட்டும் திட்டமாக - எட்டாம் வகுப்புவரை படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.5,000 திருமண நிதிஉதவி வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1996ல் நான்காம் முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற **கலைஞர்** அவர்கள், இந்த நிதியுதவி ரூ.5,000/-த்தை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் 2,195 பேர் மட்டுமே பயனடைந்துள்ளனர். ஆனால் **கலைஞர்** ஆட்சி மலர்ந்தபின், இவ்விரண்டாண்டுகளில் மட்டும் 2,949 ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியாக 2 கோடியே 94 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதியாண்டில் 1,853 ஏழை, எளிய பெண்களுக்கு 1 கோடியே 85 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரையில் 107 ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.



எஞ்சியுள்ள 1,750 ஏழைப்பெண்களுக்கு 10.8.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திருக்கரங்களால் ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது என்பது பெரு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.



### நமக்கு நாமே

இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் வகையில், மக்களாட்சி முறைமைக்கே மணிமகுடமாகப் பயனாளிகளே தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதியைத் தாங்களாகவே தேர்வு செய்து, திட்டப்பணிகளில் பங்கேற்கும் திட்டம்தான் **கலைஞரின்** சிந்தையில் உதித்த "நமக்கு நாமே திட்டம்".

அவற்றில் 5 கட்டடங்கள், 106 சாலைகள், சத்துணவு மையம் பழுது பார்த்தல், சிறுபாசன ஏரிகள் பழுதுபார்த்தல், பள்ளிக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பிற பணிகள் செயல்படுத்தப்பட்டன.

காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கனஹள்ளி கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைப்புப் பணியும், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தொலுவபெட்டா கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைத்ததும் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

### நபார்டு மூலம் நலன்

தேசிய விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியான 'நபார்டு' மூலம் தருமபுரி மாவட்டம் பெற்றுவரும் நலம் அளவிடற்கரியதாகும்.

குறிப்பாகச் சொல்லுவதானால் - இம்மாவட்டச் சாலை வசதிகளைப் பெருக்க மாநில அரசு எடுத்துள்ள சீரிய பணியில் நபார்டும் தன்னுடைய பங்கை ஆற்றி வருகிறது.

இதுவரை சுமார் 250 கிலோ மீட்டருக்கு மேலான கிராமப்புறச் சாலைகள் அமைக்க ரூ.10 கோடி வரை இந்த மாவட்டத்திற்கு நபார்டு நிதியுதவி அளித்திருக்கிறது. அது மட்டுமல்ல; தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ரூ.3.69 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பெண்ணாகரம் ஒன்றியத்தில், ரூ.7 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் ஏற்படுத்தவும் நபார்டு நிதி உதவியுள்ளது.

### நியாயவிலைக் கடைகள்

நாடு நலம் பெறவும், நலிவுற்ற மக்கள் வாழ்வு வளம்பெறவும் தக்க பல திட்டங்களை நாடுபோற்றத் தீட்டிச் செயல்படுத்திவரும் நமது முதல்வர் **கலைஞர்** அவர்களால், நாடெங்கும் உணவுப் பொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வகை செய்திடும் நியாயவிலைக் கடைகள் பல திறக்கப்பட்டுள்ளன.

13.5.96க்கு முன்பு தருமபுரி மாவட்டத்தில் 803 நியாய விலைக் கடைகள் இயங்கிவந்தன. 107 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இயங்கிவந்தன. மகளிர் நியாயவிலைக் கடைகள் 13 நடைபெற்றன.

கடந்த ஆட்சியின்போது இம்மாவட்டத்தில் எங்கும் எந்த ஒரு நியாயவிலைக் கடையும் திறக்கப்படவில்லை.

ஆனால், தலைவர் **கலைஞர்** அவர்கள், ஆட்சியில் பொறுப்பேற்றபின், தருமபுரி மாவட்டத்தில் முழுநேர நியாயவிலைக் கடைகள் 26 தொடங்கப்பட்டன. பகுதிநேர நியாயவிலைக் கடைகள் 179 திறக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### பொதுச்சுகாதாரம்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. அத்தகைய நல்வாழ்வு தமிழக மக்களுக்கெல்லாம் அமைந்திடத் தளராத முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது **கலைஞர்** அரசில் இந்த வகையில் தருமபுரி மாவட்டம், எந்த ஒரு மாவட்டத்திற்கும் இளைத்ததல்ல என்ற நிலை நாளொருமேனி பொழுதொரு வண்ணம் வலுப்பெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எனக் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் 12 மட்டுமே! ஆனால், - "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தூட்டும்" பாச உணர்வோடு நாட்டு மக்கள் நலன் காத்துவரும் நம் முதல்வர் **கலைஞர்** ஆட்சி மலர்ந்தபின், இந்த மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள கிராம சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களோ 42 ஆகும்!

### பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

**கலைஞர்** அவர்கள் ஓய்வு ஒழிச்சலின்றி அல்லும் பகலும், அயராது பாடுபட்டு சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினர்க்கெனப் பல்வேறு வழிகாட்டும் திட்டங்களைச்

தொடர்ச்சி 41 - ஆம் பக்கம்

# தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

தருமபுரி மாவட்டம், அடிப்படையில் கிராமப்புறப் பகுதிகளை அதிகமாகக் கொண்டதாகும். இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 9616 சதுர கி.மீட்டரில் 5342 சதுர கி.மீட்டர் ஊரகப் பகுதியாகும். இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மொத்த மக்கள் தொகையில், அதாவது 24,28,596ல் 21,87,921 மக்கள் இம்மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் வாழ்கின்றனர். பரந்து விரிந்து காணப்படும் இம்மாவட்டத்தில் பல்வேறு கிராமப் பகுதிகளில் இன்றைய நிலையிலும் அடிப்படை வசதிகள் முழுவதும் இல்லாத நிலையில் உள்ளன. இந்த ஊரகப் பகுதிகள் முன்னேற்றம் அடைந்தால் மட்டுமே தருமபுரி மாவட்டம் வளர்ச்சி அடைய முடியும்.

இதனைக் கருத்திற்கொண்டு அரசு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ.40 கோடி ஊரக வளர்ச்சி மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்து ஊரகப்பகுதியில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களின் வசதிகளை மேம்படுத்தவும் செலவிடுகிறது.

இம்மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைத்துச்செயல்படுத்தும் பணியினைத்தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு செயலாற்றிவருகிறது.

இம்மாவட்டத்தில், மொத்தம் 588 ஊராட்சிகளும், 18 ஊராட்சி ஒன்றியங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிர்வாகிக்கப்படுகின்றன.



**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

கடந்த ஆண்டு சுமார் 8282 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். இதற்காக ரூ.323.384 இலட்சம் மானியமாக இம்மாவட்டத்தில் அரசினால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணையாக ரூ.639.621 இலட்சம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் சுமார் 9230 குடும்பங்களுக்கு உதவ இத்திட்டத்தின்கீழ் ரூ.1051.34 முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.365 தொகை மானியமாகவும், ரூ.686.345 தொகையைத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாகவும்வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்**

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டு (1997-98) ரூ.773.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதனால் 22.84 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. மேலும் 1979 பணிகள் எடுக்கப்பட்டு கிராம வளர்ச்சிக்கு நிறைவேற்றப்பட்டன. இதன் அடிப்படையில் 1998-99ஆம் ஆண்டு இம்மாவட்டத்திற்கு ரூ.837.11 இலட்சம் பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் (15%), ஊராட்சிகள் (70%) மாவட்ட ஊராட்சி (15%) ஆகியவைகளுக்கு விகிதாச்சார முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஊராட்சி அமைப்புகள் தங்களின் பகுதி வளர்ச்சிக்காக மொத்தம் 1993 பணிகளைத் தேர்ந்தெடுத்து இப்பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

**வேலை உறுதியளிப்புத் திட்டம்**

1997-98ஆம் ஆண்டு இம்மாவட்டத்திற்கு ரூ.2006.250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1110 பணிகள் எடுத்துச் செய்யப்பட்டன. இம்மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள் அனைத்தும் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக அமைந்துள்ள காரணத்தினால் ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. இம்மாவட்டத்தில் 28.51 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டு 2.68 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு ரூ.2006.25 இலட்சத்திற்குத் திட்டம் தீட்டப்பட்டு மொத்தம் 369 பணிகள் எடுத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம்**

மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்குத் தேவையான அடிப்படை கட்டுமானப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகின்றன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.399.24 இலட்சத்தில் 60% ஊரகப் பகுதிகளுக்கும், 40% நகர்ப் பகுதிகளுக்கும் செலவிடப்படுகின்றது.

**- மோகன் பியாரே, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம்



1997-98ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ.399.24 இலட்சத்தில் 2719 பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன.

**கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 950 இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புப்பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு, 560 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி பெற்று வருகின்றனர்.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 120 பெண் குழுக்கள் அமைக்கப்பெற்று அவற்றால் 1800 மகளிர் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தினால் கிராமப்புற மகளிர் அந்தந்தக் கிராமங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப குழுக்களாக அமைத்து கிடைக்கப்பெறும் அடிப்படை மூலதனங்களின் அடிப்படையில் தொழில் செய்து முன்னேற்றமடைகின்றனர்.

**புகையில்லா அடுப்புத் திட்டம்**

கிராமப்புறப் பெண்கள் ஆரோக்கியமான சூழ்நிலையில் சமைப்பதற்கு ஏற்ற வகையில் பெண்களின் வசதிக்காகப் புகையில்லா அடுப்புக்கள் நிறுவப்படுகின்றன. கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 4685 புகையில்லா அடுப்புக்கள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டும் 4685 புகையில்லா அடுப்புக்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**சாண எரிவாயு திட்டம்**

சாண எரிவாயு திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் தொழில் நுட்பம் பரவலாக்கப்படும் நோக்கத்துடன் 100 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டன.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1997-98ல் 2371 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நடப்பாண்டில் 2422 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வீடுகள் கட்டும் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் இரண்டு நாடாளுமன்றத் தொகுதியும் ஒரு ராஜ்ய சபை உறுப்பினரும் உள்ளனர். மூன்று நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்படி பணிகள் தலா ஒரு கோடி ஒதுக்கீட்டில் செய்யப்பட்டது. அதைக்கொண்டு தேவை அடிப்படையில் மொத்தம் 163 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. 1998-99ஆம் ஆண்டிற்குத் தொகை அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் 10 சட்டமன்றத் தொகுதிக்கும் 1997-98ல் தொகை விடுவிக்கப்பட்டு 239 பணிகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

1998-99ல் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடு ரூ.35 இலட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 74 பணிகள் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரை அடிப்படையில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 10 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. எனவே 10 ஊராட்சிகள் 1997-98ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தார்ச்சாலைகள் மற்றும் பிற சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கல் நீர்ப்பிரி முகடு ஆதாரப்பணிகள், கூடுதல் பள்ளிக்கட்டடங்கள், பொதுவிநியோகக் கடைகள், நூல் நிலையங்கள், சத்துணவுக் கூடங்கள், தொலைக்காட்சி அறைகள், கால்நடை மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஒதுக்கீடு ரூ.292.39 இலட்சம் மட்டுமின்றி இதர துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியில் இக்கிராமங்களில் எடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்ற அந்தந்தத் திட்டங்களின் நிதியிலிருந்து ஒதுக்கீடு ரூ.625.64 இலட்சம் சேர்த்து ரூ.918.03 இலட்சம் செலவில் இத்திட்டம் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டு 2482 பணிகள் முடிக்கப்பெற்றுவிட்டன.

இதுபோன்று 1998-99ஆம் ஆண்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு கிராமம் சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிராம சபையால் தேர்வு செய்யப்பட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## நமக்கு நாமே திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் 1997-99ஆம் ஆண்டு 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் 18 ஊராட்சி ஒன்றியங்களில் 77 கிராமங்களில் 132 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்குப்பொதுமக்கள் ரூ.30.876 இலட்சம் தங்களுடைய பங்காக அளித்துள்ளனர். அரசு நிதியிலிருந்து ரூ.61.540 இலட்சம் அளிக்கப்பட்டு மொத்தம் ரூ.92.416 இலட்சத்தில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் 5 கட்டடங்கள், 106 சாலைகள், சத்துணவு மையம் பழுதுபார்த்தல், சிறுபாசன ஏரிகள் பழுதுபார்த்தல், பள்ளிக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய 11 பிற பணிகள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கனஹள்ளி கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைப்புப் பணியும் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தொலுவபெட்டா கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைத்ததும் குறிப்பிடப்படவேண்டிய பணிகளாகும்.

## சாலை மேம்பாடு

ஊரக வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது தரமான போக்குவரத்தாகும். தருமபுரி மாவட்டத்தில் ஊராட்சிப்பகுதிகளில் 1062.65 கி.மீ. ஊராட்சி ஒன்றிய சாலைகள் 3,315.25 கி.மீ. ஊராட்சி சாலைகள் மண் மற்றும் கப்பி சாலைகளாகவும், மழை மற்றும் கடுமையான காற்று வீசும் காலங்களில் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாமல் மாறிவிடுகின்றன. எனவே, சாலை மேம்பாட்டிற்கு அரசு முக்கியத்துவம் வழங்குகிறது. 1997-98ஆம் ஆண்டில் அரசின் உத்தரவின்பேரில் பல்வேறு திட்டங்களின்கீழ் இம்மாவட்டத்தில் 397.24 கி.மீ. சாலைகள் கப்பி சாலையிலிருந்து தார் சாலைகளாக மாற்றப்பட்டன. இவ்வாண்டும் 398 கி.மீ. நீளமுள்ள கப்பி சாலைகளைத் தார் சாலையாக மாற்ற அரசின் உத்தரவிற்கிணங்க அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



**குடிநீர் வசதி**

இம்மாவட்டத்தில் 3534 கிராமங்கள் முழுமையாக குடிநீர் வசதி பெற்றுள்ளன. 2008 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை காணப்படுகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இக்கிராமங்களுக்குத் தேவையான குடிநீர் வசதி கொடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகின்றது. ஆயினும் ஊராட்சி பகுதிகள் தேவையான உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படுகின்றன. கடந்த வருடம் அரசின் இத்திட்டத்தின்கீழ் 253 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. மேலும் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ.33.60 இலட்ச மதிப்பீட்டில் 112 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

**மின்சாரம்**

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாகவும், மாவட்ட ஊராட்சியின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக 3224 தெருவிளக்குகள் புதியதாக வழங்கப்பட்டன.

**நீர் ஆதார அமைப்பு**

பரந்து விரிந்த தருமபுரி மாவட்டத்தின் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரம் கிணற்றுப் பாசனம் ஆகும். ஆனால் பெரும்பாலான விவசாய நிலங்கள் மழை நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகின்றன. எனவே இம்மாவட்டத்திலுள்ள நிலத்தடி நீர் ஆதாரத்தினை மேம்படுத்துவதின் மூலமும் மற்றும் மழை நீரினை சேமிப்பதின் மூலமும் மட்டுமே இம்மாவட்ட விவசாயத்தை மேம்படுத்த முடியும். எனவே வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் ரூ.600 இலட்சம் செலவில் 475 நீர்நிலை ஆதாரங்கள் உருவாக்கப்பட்டன. இதில் 202 சிறுபாசனக் கண்மாய்களின் கரைகள் உயர்த்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டன. மேலும் புதியதாக 85 கசிவு நீர்க்குட்டைகள் உருவாக்கப்பட்டன. இவற்றின்மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு, இம்மாவட்டத்தில் நீர்நிலை ஆதாரங்களைப் பெருக்குவதற்கு ரூ.800 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு ஊராட்சிக்குக் குறைந்த பட்சம் ஒரு நீர்நிலை ஆதாரங்களையாவது புதியதாக உருவாக்குவது அல்லது ஏற்கெனவே உள்ள நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நீர் பிரிமுகடு திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 58 நீர்ப்பிரி முகடு சங்கங்கள் அமைக்கப்பட்டு மக்களின் ஒத்துழைப்புடன் ரூ.750 இலட்சம் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, நீர் ஆதாரங்களின் மேம்படுத்தும் பணி சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள்**

அரசின் உத்தரவின்படி கிராமப்புறங்களில் கல்வி நிலையங்களுக்குத் தேவையான கட்டட வசதியினைச் செய்து கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு பல்வேறு திட்டங்களின்கீழ் 225 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இம்மாவட்டத்தில் 1996-97 மற்றும் 1997-98ல் புதியதாக துவங்கப்பட்ட கல்வி நிலையங்களுக்குப் பள்ளிக் கட்டடங்கள் உடனடியாக இத்துறையின் மூலம் கட்டி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கிராமப்புறங்களில் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டுமானப் பணிகள் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதால் இவ்வாண்டு இம்மாவட்டத்தில் 84 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நியாய விலைக்கடைகள்**

கிராமப்புறப்பகுதியில் மக்களுக்குத் தேவையான பொருட்களை நியாயமான விலைக்கு வழங்குகின்ற நியாய விலைக் கடைகள் பொருட்களைத் தரமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டித்தர ஊரக வளர்ச்சித்துறை ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் மொத்தம் 110 நியாய விலைக்கடைகள் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டன. இந்த வருடமும் 117 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று குழந்தைகள் சுகாதாரமான முறையில் சத்துணவு உண்பதற்காக 18 சத்துணவு மையங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மக்கள் நாட்டு நடப்பினைத்தெரிந்து கொள்வதற்கு வசதியாக 1191 தொலைக்காட்சி அறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பயணிகள் அமர்ந்து கொண்டு இருப்பதற்கு வசதியாக 137 பயணிகள் நிழற் கூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தருமபுரி மாவட்டம், கிராமப்புற வளர்ச்சிக்காகப் பெற்ற, தமிழக அரசின் உதவிகள் அனைத்தும், தரமானதாகவும் விரைவாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ★



மனிதன்
தனக்குள்ளாகவே,
தான் மற்றவனைவிடப்
பிறவியில் தாழ்ந்தவன்
என்கின்ற உயர்வு
தாழ்வு உணர்ச்சியைப் போக்கித்
தன்னம்பிக்கையும், சுயமரியாதையும்
பெறவேண்டும்.

\- தந்தை பெரியார்

# முன்னேற்றப் பாதையில் பெண்கள்

செல்வி. அபூர்வா இ.ஆ.ப., சார் ஆட்சியர், ஓசூர்

இயற்கை எழில் கொஞ்சும் வனச்சூழல், மிதமான தட்பவெட்பம், இந்திய மொழிகள் அனைத்தையும் பேசக்கூடிய மக்களைக்கொண்ட பகுதி உலகளவில் பெயர்தாங்கி நிற்கும் பெரிய தொழிற்சாலைகள், இயற்கையினை நினைவூட்டும் யானை, சிறுத்தை, கரடி போன்ற விலங்கினங்களைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புப் பெற்றுள்ள இந்நகர் தமிழக-கர்நாடக எல்லைப் பகுதியில் தருமபுரி மாவட்டத்தினுள் தருமபுரியிலிருந்து மேற்குத் திசையில் சுமார் 100 கி.மீ. தூரத்திலும், பெங்களூரிலிருந்து கிழக்குத் திசையில் சுமார் 40 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

சிறப்புகள் பல பெற்றுள்ள இக்கோட்டத்தில் மகளிர் நிலை என்ன என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்ப்போம்.

ஓசூர் கோட்டத்தில் ஆண்கள் 3,00,013 பேர், பெண்கள் 2,89,000 பேர் என மொத்தம் சுமார் 5,87,000 பேர் உள்ளனர்.

**மன்னர் காலத் தாக்கம்**

விஜயநகரப்பேரரசு முதல் மராட்டியர்கள், திப்புசுல்தான் எனப் பல மன்னர்கால ஆட்சிகளின் போதும், இவர்களின் நேரிடை ஆளுகைக்குட்படாமல் விஜயநகர பாளையக்காரர்களின் கட்டுப்பாட்டிலேயே ஓசூர் கோட்டம் இயங்கி வந்ததால், இக்கோட்ட மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள் பாளையக்காரர்களைப் பின்பற்றியே வந்துள்ளது.

பின்னர் இப்பகுதி மூதறிஞர் ராஜாஜி அவர்களால் (இவர் ஓசூர் அருகேயுள்ள தொரப்பள்ளியில் பிறந்தவர் என்பதால்) வரலாற்றில் ஒரு நிரந்தர இடம் பெற்றுவிட்டது.

**மகளிர் நிலை**

சிறப்புகள் பல கொண்ட இக்கோட்டத்தின் பெண்கள் நிலை பல்வேறு காரணங்களால் மிகவும் பின்னடைந்து காணப்படுகிறது.

இதற்கு முக்கியக் காரணம் போதிய கல்வியறிவு பெண்களுக்கு வழங்கப்படாததுதான்.

இக்கோட்டம் பரவலான குடியிருப்புகளைக் கொண்டு, அதிகளவு மானாவாரி விவசாயத்தில் ஈடுபடும் மக்களைக் கொண்டதாகும். குறிப்பாக விவசாயத்தில் பெண்கள் அதிக அளவு ஈடுபடுத்தப்படுவதால் அவர்களுக்குப் போதிய கல்வியறிவும், சமூகச் சிந்தனைகளையும் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மேலும் தொலைவில் உள்ள பள்ளிகளுக்குப் பெண்களை அனுப்பும் பழக்கமும் இக்கோட்டத்தில் குறைந்தே காணப்படுகிறது.

இக்கோட்டத்தில் பெண்களின் கல்வி என்பது தங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளின் நிலைமையைப் பொறுத்தே அமைகிறது. அதிக பட்சக் கல்வி என்றால் மேல்நிலைப் படிப்பாகத்தான் இருக்கும். இப்பகுதிகளில் கல்லூரியோ, உயர் கல்வி நிலையங்களோ இல்லாததும் ஒரு காரணமாகும்.



இக்கோட்டப் பெண்களின் பின்னடைவிற்குச் சமூகச் சூழ்நிலைகளும் காரணமாகிவிடுகின்றன. அதிகளவு விவசாயத்தில் ஈடுபடுதல், குறைந்த வயதிலேயே திருமணம், இளம் வயதிலேயே கணவனால் கைவிடப்படுதல், பெற்றோர்களின் பொருளாதாரப் பின்னடைவு போன்ற பல காரணங்கள் உண்டு.

பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் தங்கள் வளர்ச்சிக்குக் குறுக்கேயுள்ள தடைகளைப் பற்றி உணர்ந்தாலும் அவைகளை நீக்கப் போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. காரணம், அவர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்க யாரும் முன்வராததுதான்.

"உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடை உடையரோ மற்று" எனும் வள்ளுவர் குறளுக்கு ஏற்ப, பின்தங்கியுள்ள ஓசூர் கோட்டப் பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களுக்குத் தேவையான தன்னம்பிக்கையும் ஊக்கமும் தர அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

**அறிவொளியும், பெண்களும்**

பெண்களின் தன்னம்பிக்கை குறைவிற்குக் காரணம் நாட்டு நடப்புகளும், சமூக மாற்றங்களும் உணராததால்தான் என்பதால் அரசின் அறிவொளி இயக்கம், இக்கோட்டத்தில் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறிவொளி 'வெறும் கல்வி கற்க' மட்டுமே என்றில்லாமல் பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக சுயஉதவிக்




குழுக்களை **(Self Help Groups)** அமைத்தல், சிறுசேமிப்பு, வங்கிக் கணக்கு போன்றவற்றை தொடங்குதல், பெண்கள் தங்கள் குறைகளைக் கூறி ஆலோசனை பெறுதல் போன்ற பல விவரத் தொகுப்பாக அறிவொளி இயங்கிவருகிறது.

அது மட்டுமின்றி, பெண்கள் அதிக அளவு கல்வி பயிலும் கிராமங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் கிராம நூலகங்களையும் அமைத்துத் தருகிறது.

பெண்களின் தன்னம்பிக்கை வளரும் விதமாக 96-97-ஆம் ஆண்டு அரசு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. ஏழைக் குடும்பப்பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் போன்றவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**'டோக்ரா' மூலமாக அறிவொளியில் பயிலும் பெண்கள்**

தங்களுக்குள் ஒரு குழு அமைத்துக் கொண்டு அதன் மூலம் ஒரு சிறுதொகையை ஒவ்வொருவரும் சேமிக்கும் போது, அத்தொகைக்கு ஈடான தொகையை அரசு அளித்து உதவுகிறது.

இத்தொகை மூலம் பெண்கள் குழுவில் உள்ள உறுப்பினர்கள் தாங்கள் ஒரு சிறிய தொழில் தொடங்கி முன்னேற வழிவகை செய்கிறது. இதன் மூலம் மேடை அலங்காரம், அப்பள வியாபாரம், முட்டுக்கடைகளை வாடகைக்கு விடுதல் போன்றவைகளும் இக்கோட்டத்தில் அதிக அளவு உற்பத்தியாகும் காய்கறி, பூ வகைகள் போன்றவற்றை விற்பனை செய்யவும் இத்திட்டம் உதவுகிறது

**மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (IFAD)**

இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கம் பெண்களைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துதல் ஆகும்.

கிராமப்புறங்களில் பெண்கள் மூலம் இயங்கும் சுயஉதவி குழுக்களை அமைத்தல், சேமிப்பைத் தொடங்குதல், வங்கிக் கணக்கு ஆரம்பித்தல், கணக்கு விவரங்களைச் சரிபார்த்தல் போன்ற பல பொருளாதார ரீதியான செயல்பாடுகள் கொண்டதாக இத்திட்டம் உள்ளது.

இவ்வாறு கணக்கு வழக்குகளைப் பெண்கள் மேற்கொள்ளும் போது ஒரு நிர்வாகப் பொறுப்பும் கடமை உணர்வும் பெண்களுக்குக் கிடைக்கிறது.

இதுமட்டுமன்றி, இத்திட்டத்தின் மூலம் பெண்கள் அமைத்துள்ள சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் பணக்கஷ்ட நேரத்தில் ஒருதொகையைக் கடனாக பெற்று அவற்றைத் திரும்பச் செலுத்தவும் முடிகிறது. இச்சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளும் கடன்உதவி அளித்து பெண்களின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறது.

சுயஉதவிக் குழுக்கள் பெறும் கடன்களைக் கொண்டு உறுப்பினர்கள் பட்டுவளர்ப்பு, விவசாயம், கால்நடை, கால்நடைத் தீவனம் தயாரித்தல், விவசாய நீர்ப் பிடிப்புப் பகுதிகளை உருவாக்குதல் போன்றவைகளையும், தையல் தொழில், புகைப்படம் எடுத்தல், கூடை பின்னுதல், பாய் நெய்தல் போன்ற சிறுதொழில்களையும் 'ஐபாட்' திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. கடன் வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் வருடந்தோறும் கணக்குகளைச் சரிபார்த்தல் போன்றவைகளைச் சுய உதவிக் குழுக்களே மேற்கொள்வது இதன் சிறப்பம்சமாகும்.

**வனத்துறையின் பங்கு**

பெண்களின் முன்னேற்றத்திற்கு ஓசூர் கோட்டத்தில் வனத்துறையும் உதவி வருகிறது.

வனத்துறை சார்பாக தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின் மூலம் கால்நடை வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் வனப் பகுதிகளில் விறகு வெட்டி எடுக்கும் பணிகளில் அதிகளவு பெண்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு

வனப்பகுதிக்குச் செல்லும் பெண்கள் காட்டு மிருகங்களின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் சூழ்நிலையும் உள்ளது. அத்துடன் வனப்பகுதியும் அழிக்கப்படுகிறது.

இதனைத் தடுக்கும் விதமாக இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்குச் சுய வேலையளிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. ஊதுவத்தி தயாரித்தல், மாட்டுத் தீவனம் தயாரித்தல் போன்றவைகள் இதில் அடங்கும்.

கிராம வனப்பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டு, அதில் கண்டிப்பாக பெண்கள் இடம்பெற வழிவகை செய்கிறது.

மேலும் ஓசூர் கோட்டத்தில் கங்காபுரம் கிராமத்தில் மானாவாரிப் பயிர் வகைகளால் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பதால் 13 பேர் கொண்ட பெண்கள் குழுவிற்குத் தலா அரை ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அந்நிலத்தில் ரோஜா செடிகளை வளர்க்க வனத்துறை உதவியுள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால் ரோஜா செடிகள், உரம் போன்றவற்றையும் வனத்துறையே வழங்கி, விளையும் ரோஜாப் பூக்களை வனத்துறையே விற்பனை செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து தருகிறது.

இதனால் விவசாய விளைபொருட்களைவிட அதிக லாபம் ரோஜா விளைச்சலில் பெண்கள் பெறுகிறார்கள்.

**பஞ்சாயத்துக்களில் பெண்கள்**

இக்கோட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் 33 சதவீதம் பெண்களே தலைவிகளாக இருப்பதால், தங்கள் பகுதி பிரச்சினைகளைத் தலைவிகளிடம் நேரிடையாக எடுத்துக்காண பெண்களுக்கு ஒரு வாயப்பு கிடைத்துள்ளது.

இதன் மூலம் தங்கள் பகுதித் தண்ணீர்ப் பிரச்சினை, கள்ளச் சாராயப் பிரச்சினை போன்றவற்றை எடுத்துக் கூறி வருகின்றனர். இவர்களுள் தீவிர விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதை அறிய முடிகிறது.

**பெண்களின் பாதுகாப்பு**

இக்கோட்டத்தில் பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், ஊக்கமும், மனோதிடமும் வளர்ந்து வருவதற்கு ஆதாரமாக ஓசூர் மகளிர் காவல் நிலையப் பட்டியலே போதும்.

காவல் நிலையம் என்றாலே கஜ தூரம் ஓடிப்போகும் நிலை மாறி, இன்று தங்கள் குறைகளையும் கொடுமைகளையும் தைரியமாகப் புகார் கொடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வருகின்றனர் பெண்கள். 1995ஆம் ஆண்டு பதிவான பெண்கள் தொடர்பான வழக்குகள் 54 மட்டுமே. ஆனால் 1996-ம் ஆண்டில் 134 வழக்குகளும், 1997ம் ஆண்டில் 167 வழக்குகளும், 1998 ஜூலை வரை 95 வழக்குகளும் பதிவாகியுள்ளன.



பெண்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விழிப்புணர்வோடு செயல்படுவதையே இது காட்டுகிறது.

மறைக்கப்பட்டு வந்த வரதட்சணைக் கொடுமைகளும், வரதட்சணைக் கொலைகளும் பெண்களால் புகார்களாகத் தரப்படுகிறது. இதற்குக் காரணம் பெண்களின் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்துவருவதுதான்.

இந்த ஆண்டு ஜூலை முடியப் பதிவான 95 வழக்குகளில் 21 வழக்குகள் பெண்களின் சந்தேக மரணங்கள் ஆகும். இவற்றில் 5 வழக்குகள் வரதட்சணைக் கொடுமைகளாகும். இந்த 5ல் இரண்டு வரதட்சணைக் கொலைகள் எனக்கண்டறிந்து நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இக்கோட்டத்தில் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் விதவை கருணைத் தொகை, ஓய்வூதியம் இவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா, மூவலூர் இராமாமிர்தம் திட்டம் மூலம் திருமண உதவித்தொகை ரூ.10,000/- வழங்குதல் போன்றவை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் நிறைந்த இக்கோட்டத்தில் தனியார் தொழிற்சாலைகளும் பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிந்து வருகின்றன. தமிழக அரசையும் பங்குதாரராகக் கொண்ட டைட்டான் கடிகாரத் தொழிற்சாலை தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் பெண்களுக்குக் கடிகார செயின் கோர்க்கும் பணி அளித்து உதவி வருகிறது.

அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம், சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட்டு தங்கள் குறை நிறைகளை மாதமிருமுறை கூடி விவாதித்து தாங்களே நிவர்த்தி செய்து கொள்ளும் திறனையும், சுயதொழில், அறிவொளி போன்றவற்றில் பங்கு கொண்டு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு தலைமைப் பொறுப்பேற்று வழி நடத்தி செல்லும் துணிவும் கொண்டவர்களாக "சாதம் படைக்கவுஞ் செய்வோம் தெய்வச் சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்" என்ற பாரதி பாடலுக்கேற்றவாறு ஓசூர் கோட்ட மகளிர் செயல்பட்டு வருகிறார்கள். ●

# ஒசூரில் சிப்காட் தொழில் வளாகம்

ஒசூரில் சிப்காட் தொழில் வளாகம் 1974-இல் தொடங்கப் பட்டது. ஒசூர் தொழில் வளாகம் வேகமாக வளர்ந்து தமிழ்நாட்டில் உள்ள தொழில் வளாகங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகிறது.

சிப்காட் தொழில் வளாகத்தின் முதல்பகுதி பெங்களூர் ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் 1235.86 ஏக்கரில் அமைந்துள்ளது. இதில் 970.05 ஏக்கர் நிலம் 184 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 137 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கி செயல்பட்டு வருகின்றன. மற்றவை பல்வேறு நிலைகளில் அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

வளாகத்தின் இரண்டாவது பகுதி ஒசூர் - கிருஷ்ணகிரி சாலையில் 456.82 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 70 தொழில் நிறுவனங்களுக்கு 388.12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31 தொழில்நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கி செயல்பட்டு வருகின்றன.

ஒசூர் சிப்காட் தொழில் வளாகத்தில் முதல் பகுதியில் ரூ.2,500 கோடியும், இரண்டாவது பகுதியில் ரூ.700 கோடியும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலைகள் மூலம் 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**வளர்ச்சி**

சிப்காட் தொழில் வளாகம் தொடங்குவதற்கு முன் ஒசூரின் மக்கள்தொகை 10,000. ஆனால் தற்போது 1,50,000 ஆகும்.

இவ்வளாகத்தின் மூன்றாவது பகுதியில் 'மின்னணுத் தொழில் பூங்கா' ஒசூர் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 5,500 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட உள்ளது. இது இரண்டு கட்டமாக அமைக்கப்படும். முதல் கட்டத்தில் 3,000 ஏக்கரிலும் 2வது கட்டத்தில் 2,500 ஏக்கரிலும் அமைக்கப்படும்.

இந்த இரண்டு பிரிவிலும் தொழிற்சாலைகள் தொடங்க எல்லா அடிப்படை வசதிகளையும் சிப்காட் செய்து தருகின்றது.

இங்கு முழுமையான காவல் நிலையம் இயங்கி வருகின்றது. 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையும், ஒரு தனியார் மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. முதல் உதவி நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

1400 இணைப்புகளை கொண்ட தொலைபேசி இணைப்பகம் இயங்கி வருகிறது. தபால் நிலையம் ஒன்றும் இங்கு உள்ளது. இதற்கு முதலில் 0.74 ஏக்கர் பிறகு 0.73 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு நிலையம்**

சிப்காட் ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்துள்ளது.

**போக்குவரத்து**

அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இவ்வழியில் அடிக்கடி இயக்கப்படுகின்றன. நகர பேருந்துகள் (Town Bus) இயக்கப்படுகின்றன. இங்கு ரயில்வே நிலையம் உள்ளது. சேலம் - பெங்களூர் ரெயில்கள் இவ்வழியே செல்கின்றன.

**வங்கி**

வங்கி வசதியும் இங்கு உண்டு. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் ஸ்டேட் பாங்க் இங்கு தங்களது கிளையினை அமைத்துள்ளன.

உணவு விடுதி ஒன்று உள்ளது. இதற்கு 100 ச.மீ. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது குத்தகை முறையில் நடத்தப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. இதில் 2,600 மாணவர்கள் பயில்கிறார்கள். இதற்கு 9.74 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வீட்டுவசதி**

291 மனைகள் கொண்ட வீட்டு வசதி வளாகம் அமைந்துள்ளது. 307 மனைகள் கொண்ட ஊழியர் வீட்டு வசதி வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது. 370 வீடுகள் கொண்ட குடியிருப்பும் அமைக்கப்பட்டுள்ளது. 210 மனைகளும் உள்ளன.

**வணிகவளாகம்**

இரண்டு அடுக்கு கொண்ட, 24 கடைகள் கொண்ட வர்த்தக வளாகம் அமைந்துள்ளது. இவற்றில் சில விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில தவணை முறையிலும், சில வாடகைக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்வாரியம் 110/11 கி.வா. துணை மின்நிலையம் ஒன்றினை 10.63 ஏக்கர் பரப்பில் அமைத்துள்ளது.

இந்த வளாகத்தில் டைட்டான் தொழிற்சாலை 35.98 ஏக்கரிலும், எல்காட் தொழிற்சாலை 7.70 ஏக்கரிலும், இங்கிலீஷ் எல்க்ட்ரிக் கம்பெனி 21.56 ஏக்கரிலும், கார்பொரண்டம் யுனிவர்சல் 24.52 ஏக்கரிலும், இந்துஸ்தான் லீவர் கம்பெனி 16.58 ஏக்கரிலும், பாட்டா கம்பெனி 10.31 ஏக்கரிலும், டி.டி.கே. பிரிஸ்டீஸ் லிமிடெட் 13.83 ஏக்கரிலும், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் 15.09 ஏக்கரிலும், சிட்கோ 95.15 ஏக்கரிலும், அசோக் லோலண்ட் 102.58 ஏக்கரிலும், தொழிற்சாலைகளை அமைத்துள்ளன. அங்கு அமையப் பெற்ற தொழிற்சாலைகளில் குறிப்பிடத்தக்க சில மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

★ ★ ★

# சமூக நலம்



கடந்த இரண்டு ஆண்டுகளில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தகுதியுடைய 2,949 ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், ரூ.2 கோடியில் 2,000 ஏழைப்பெண்கள் பயனடைகின்றனர்.

**அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதியுதவித்** திட்டத்தின்கீழ் 35 இணைகளுக்கு நிதியுதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 17 நபர்களுக்கு ரூ.1,07,000 நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ.50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விதவையர் மகள் திருமண நிதியுதவித்** திட்டத்தின்கீழ், ரூ.4 இலட்சத்து 8 ஆயிரம், 157 விதவையர் பெண்களுக்குத் திருமண உதவிகள் அளிக்கப்பட்டன. இவ்வாண்டிற்கென, இத்திட்டத்தின் கீழ் 50 பேர்கள் பயனடையும் வகையில், ரூ.2.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று ஆதரவற்ற 11 மகளிர்க்கு ரூ.28,000 திருமண உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கு ரூ.25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த பெண்கள்** மற்றும் உடல் ஊனமுற்றோர்க்குச் சுயதொழில் அடிப்படையில் ரூ.3.80 இலட்சம் செலவில் 210 நபர்களுக்கு இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

**டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித்** திட்டத்தின்கீழ், 1996-97ல் ரூ.200 வீதம் 9,334 கருவுற்ற மகளிர்க்கு ரூ.18.67 இலட்சமும்; 1997-98ல் ரூ.500 வீதம் 12,500 பெண்களுக்கு ரூ.62.50 இலட்சமும் மகப்பேறு நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளன.

**பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்** கீழ், 1996-97ல் 1143 பெண்குழந்தைகளுக்கு ரூ.1,500 வீதம் ரூ.17.15 இலட்சமும், 1997-98ல் ரூ.1,500 வீதம் 614 பெண்குழந்தைகளின் பெயர்களில் ரூ.9.20 இலட்சமும், ரூ.3,000 வீதம் 23 பெண் குழந்தைகளின் பெயர்களில் ரூ.69 ஆயிரமும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகத்தில் காப்பீட்டுத் தொகைகளாக முதலீடு செய்யப் பட்டுள்ளன.

## இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

மகளிர் மேம்பாட்டு தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக 1,699 பெண்கள் சுயவேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 1996-97ல் இச்சங்கங்களுக்கு ரூ.32.82 இலட்சமும், 1997-98ல் ரூ.34.26 இலட்சமும் தையற்கூலிகளாக வழங்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 900 நபர்களுக்கு 1,64,700 மதிப்புடைய இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 120 நபர்களுக்கு 2,16,000 மதிப்புடைய இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



## இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம்

1996-97 ஆம் ஆண்டில் 144 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.17,760 மதிப்புடைய இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப் பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 2,307 குழந்தைகளுக்கு ரூ.39,928/- மதிப்புடைய இலவச பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப் பட்டுள்ளன. நடப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.60,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் பிரிக்கப்பட்டு தனி மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அதன் மொத்த பரப்பளவு 9,640 ச.கி.மீ. ஆகும். மாவட்டத்தின் மொத்த பரப்பளவில் 3-ல் ஒரு பகுதி காடுகளைக் கொண்டதாகும்.

தருமபுரி மாவட்டத்தில் போதிய நீர்ப்பாசன ஆதாரங்கள் இல்லை. அனைத்து நீர்ப்பாசன ஆதாரங்களையும் கொண்டு பாசனம் பெறும் பயிரும் குறைந்த மகசூல் தரும் சாமை, வரகு போன்ற இதர சிறுதானியப் பயிர்கள் 14.0 சதம் பரப்பிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில் நெல் பயிர் சாதாரணமாக 52,500 எக்டேரில் சாகுபடி செய்யப்படும். 1996-97 ஆம் ஆண்டில் 66,000 எக்டேர் பரப்பளவிலும், 1997-98 ஆம் ஆண்டில் 68,000 எக்டேர் பரப்பளவிலும் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இம்மாவட்டத்தில் பெருமளவு பயிர்ச் சாகுபடிப் பரப்பு மானாவாரிப் 2.11 இலட்சம் மெ.டன்னும், பயறுவகைப் பயிர்களில் 0.74 இலட்சம் மெ.டன்னும், பருத்தியில் 0.38 இலட்சம் பேல்களும், கரும்பில் 1.52 இலட்சம் மெ.டன், வெல்லமும், எண்ணெய்வித்துப் பயிர்களில் 1.54 இலட்சம் மெ.டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் 2.14 இலட்சம் மெ.டன்னும், சிறுதானியத்தில் 1.96 இலட்சம் மெ.டன்னும், பயிறுவகைப் பயிர்களில் 0.59 இலட்சம் மெ.டன்னும்,

# வேளாண்மை வளர்ச்சி

பயிர்களின் மொத்த பரப்பளவு 1.34 இலட்சம் எக்டேர்கள் ஆகும். இது நிகர சாகுபடிப் பரப்பளவில் 34.80 சதவிகிதம் ஆகும். அனைத்து நீர்த்தேக்கங்களின் மூலமாக 17,237 எக்டேர் பரப்பளவு பாசனம் பெறுகிறது.

## பயிர்ச் சாகுபடி விவரம்

தருமபுரி மாவட்டத்தில் நிலக்கடலைப் பயிர் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மொத்த சாகுபடி பரப்பளவில் 21.0 சதம் நிலக்கடலை பயிரும் 19.0 சதம் இராகிப் பயிரும், 13.0 சதம் நெல்பயிரும், 10.0 சதம் சோளப் பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையையே நம்பி இப்பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. சிலசமயம் பருவம் தவறிப் பொழியும் மழையினால் விதைப்பு பாதிக்கப்பட்டு சாகுபடிப் பரப்பில் இழப்பும் ஏற்படுவது இயல்பாக உள்ளது.

## பயிர்களில் சாகுபடி மற்றும் உற்பத்தி

1996-97 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் 2.09 இலட்சம் மெ.டன்னும், சிறுதானியத்தில் 



பருத்தியில் 0.28 இலட்சம் பேல்களும், கரும்பில் 1.85 இலட்சம் மெ.டன் வெல்லமும், எண்ணெய்வித்துப் பயிர்களில் 1.46 இலட்சம் மெ.டன் வெல்லமும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

## விதைப் பெருக்குத் திட்டம்

விளை பொருட்களுக்கான உற்பத்தியை உயர்த்தி விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படச் செய்ய இம்மாவட்டத் திலுள்ள 30 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் தரமான சான்று பெற்ற விதைகள் விநியோகம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றன.

1996-97 ஆம் ஆண்டில் 496 மெ.டன் நெல் விதைகளும், 33 மெ.டன் சிறுதானிய விதைகளும், 59 மெ.டன் பயறுவகை விதைகளும், 200 குவிண்டால் பருத்தி விதைகளும் மற்றும் 452 மெ.டன் எண்ணெய்வித்து விதைகளும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

1997-98ம் ஆண்டில் நிலவிய பருவநிலையினாலும், நீர் ஆதாரங்களில் நீர் நிலைமையின் அடிப்படையிலும், 378 மெ.டன் நெல் விதைகளும், 49 மெ.டன் சிறுதானிய விதைகளும், 110 மெ.டன் பயிறு வகை விதைகளும், 136 குவிண்டால் பருத்தி விதைகளும் மற்றும் 482 மெ.டன் எண்ணெய்வித்து விதைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

தென்னைப் பயிர்களின் சாகுபடி அதிகரித்து தேங்காய் உற்பத்தியைப் பெருக்கிட, 1996-97 ஆம் ஆண்டில் 398 எக்டேர் பரப்பு நெட்டை இரகத்திலும், 240 எக்டேர் பரப்பு வீரிய ஒட்டுத் தென்னை இரகத்திலும் சாகுபடி செய்வதற்கான தென்னங் கன்றுகளும், அதேபோல் 1997-98ம் ஆண்டில் 475 எக்டேர் நெட்டை இரகத்திலும், 215 எக்டேர் வீரிய ஒட்டுத் தென்னை இரகத்திலும் சாகுபடி செய்யத் தேவையான தரமான நெட்டை மற்றும் வீரிய ஒட்டு இரகத் தென்னங்கன்றுகள் பி.ஜி.புதூர் மற்றும் அகசிப்பள்ளி தென்னை நாற்றுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

## உரம் மற்றும் உயிரின உரங்கள் விநியோகம்

1996-97 ஆம் ஆண்டில் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்கள் முறையே 21,050 மெடன், 10,050 மெடன் மற்றும் 9,075 மெ.டன். உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. உயிரின உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் ரைசோபியம் முறையே 98,373 எண் 43,190 எண் மற்றும் 1,21,319 எண். என்கிற அளவில் வேளாண் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

1997-98 ஆம் ஆண்டில் 19,153 மெ.டன். தழைச்சத்து, 9,170 மெ.டன் மணிச்சத்து மற்றும் 9,772 மெ.டன் சாம்பல் சத்து தரவல்ல இரசாயண உரங்களைத் தருமபுரி மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன. உயிரின உரங்களைப் பொறுத்த மட்டில் அசோஸ்பைரில்லம் 1,15,970 எண்களும், பாஸ்போபாக்டீரியா 49,441 எண்களும், ரைசோபியம் 80,658 எண்களும் வழங்கப் பட்டன.

## கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தி

இம்மாவட்டத்தில் பாப்பாரப் பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு பயோ கண்ட்ரோல் லேப் ஒன்று இயங்கி வருகிறது. இதில் வருடந்தோறும் கரும்பைத் தாக்கும் இடைக்கணுப் புழுக்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த ட்ரைக்கோ டொர்மா முட்டை ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு 15 சி.சி. ரூ.17.50 வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1996-97ம் ஆண்டில் 727 எக்டேரிலும், 1997-98ம் ஆண்டு 520 எக்டேரிலும் கரும்பு ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறை மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்வருமாறு விவசாயிகளுக்குப் பல பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி)

இத்திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு மானிய விலையில் நெல் மற்றும் சிறுதானிய விதைகளும் வேளாண்மைக் கருவிகளும் விநியோகம் செய்யப்படுகின்றன. 1996-97 ஆம் ஆண்டு ரூ.13.65 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில் ரூ.13.97 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது. இதேபோல் 1997-98ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.9.44 இலட்சம் ஒதுக்கீட்டில் ரூ.9.45 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

## தேசியப் பயறுவகை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிறுவகை பயிர்களில் உற்பத்தியினையும், சாகுபடிப் பரப்பினை கூடுதலாக்கிடும் பொருட்டு, மானிய விலையில் விதைகளை விநியோகம் செய்யவும், அவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் மூலம் விதைப்பண்ணை அமைக்கவும், கொள்முதல் மானியம், வழங்கவும், மேலும், செயல் விளக்கத்திடல்களுக்கு விதைகள், உரம், நுண்ணூட்டச்சத்து ஆகியவை வழங்கவும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் ரூ.10.6 இலட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. அதேபோல் 1997-98-ம் ஆண்டில் ஒதுக்கீடு பெறப்பட்ட ரூ.11.295 இலட்சத்திற்கு ரூ.11.4 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

## சுபாக்ஸ்

மத்திய சார்புத் திட்டத்தின் கீழ் கரும்பு செயல்விளக்கத் திடல்கள், உழவர்களுக்கான பயிற்சி, வேளாண்மைக் கருவிகள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9.55 இலட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. அதேபோல் 1997-98ம் ஆண்டில் ரூ.2.76 இலட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது.

## நெல் சிறுதளை விநியோகம்

புதியதாக வெளியிடப்பட்ட நோய் எதிர்ப்புத் தன்மை கொண்ட மகசூல் கூடுதலாகத் தரத்தக்க ரகங்களை உழவர்களிடையே பிரபலப்படுத்தும் முக்கிய நோக்கத்துடன்



இத்தகைய சிறுதளைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் 1996-97ம் ஆண்டு ரூ.0.22 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில் முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98ம் ஆண்டு ரூ.0.175 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு முழுமையாக சாதனை எய்தப்பட்டுள்ளது.

இதேபோல் சிறுதானிய தீவிர சாகுபடி திட்டத்திற்கென செயல்விளக்கத் திடல்களை ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கான சிறப்பு விநியோகத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதற்காக 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.0.14 இலட்சம் முழுமையாக சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98 ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.0.17 இலட்சம் முழுமையாகச் சாதனை புரியப்பட்டுள்ளது.

## மானிய விலையில் வேளாண்மை இயந்திரங்கள் வழங்குதல்

அறிவியல் தொழில் நுட்பங்கள் முக்கியத்துவம் பெற்றுவரும் இந்நாளில் பாரம்பரியம் மிக்க வேளாண்மைக் கருவிகளுக்குப் பதிலாக விவசாயிகளின் சிரமங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் இயந்திரங்களைக் கொண்டு இயக்கும் வேளாண்மைக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதில் 30 எச்.பி. டிராக்டர் விநியோகத்தில் 1996-97 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.3.6 இலட்சம் முழுமையாகச் சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்ட ரூ.6.3 இலட்சம் முழுமையாக சாதனைச் எய்தப்பட்டுள்ளது.

பவர் டில்லர்களில் 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ள ரூ.2.4 இலட்சம் முழுமையும் சாதனை எய்தப்பட்டுள்ளது 1997-98 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ள ரூ.3 இலட்சமும் முழுமையாகச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகளுக்குப் பயனுள்ள விதை, உரம், கூடுதல் மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்ப உழவியல் முறைகளை எளிதாக்கும் வேளாண்மைக் கருவிகள் ஆகியன தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு வித்திட இம்மாவட்டம் சிறப்பு முயற்சியினை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

## மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், தருமபுரி மாவட்டத்தில் மத்தூர், அரூர், காரிமங்கலம், கிருஷ்ணகிரி ஆகிய 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.31.91 இலட்சங்களும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.37.82 இலட்சங்களும் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் உள்ள வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு இனங்களின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் பென்னாகரம் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் தாவரத் தடுப்பு அமைத்தல், தோட்டக்கலை மரம் வளர்ப்பு, மரம் வளர்ப்பு, செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், வேளாண்மைக் கருவிகள் வழங்குதல் மற்றும் வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய இனங்களில் 1996-97ம் ஆண்டில் ரூ.4.997 இலட்சங்களும் 1997-98ம் ஆண்டில் ரூ.1.423 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

## தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சான்று விதை விநியோகம், இனக்கவர்ச்சிப் பொறி செயல்விளக்கம், என்பிவைரஸ் செயல்விளக்கம், பெருவிளக்கப்பண்ணை அமைத்தல், உழவர் வயல்வெளிப்பள்ளி, தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்தல் மற்றும் விவசாயிகள் பயிற்சி முதலிய இனங்களுக்கு (1996-97 ம் ஆண்டு) ரூ.16.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 15.75 இலட்சம் சாதனை அடையப்பட்டது. இதேபோல் சென்ற ஆண்டு (1997-98) ரூ.18.91 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 18.90 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டது.

எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டும், 1996-97ம் ஆண்டில் எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க ரூ.55 இலட்சம் மானியத் தொகைக்கான இடுபொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டன.

மேலும், 1997-98ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 46 இலட்சம் மானியத் தொகைக்கான இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டன.

இம்மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குச் சத்துள்ள தீவனப் பயிர் அளித்து பால் உற்பத்தியை பெருக்கிட 1996-97ம் ஆண்டில் ரூ.66,000/- செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் புல் கரணைகள் மற்றும் தீவனப் பயிர்களின் விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மானாவாரி நிலங்களில் உர உபயோகத்தினை அதிகரிக்கும் பொருட்டு 1996-97ம் ஆண்டில் 4,250 சிறு/குறு விவசாயிகளுக்கு சிறிய பைகளில் உர விநியோகம் ரூ.96,625/-, திருந்திய முறையில் கம்போஸ்ட் தயாரிக்க ரூ.1,12,500/-ம் ஒருங்கிணைந்த உர உபயோகச் செயல் விளக்கத்திடல் அமைக்க ரூ.1,17,000/- மானியம் வழங்கப்பட்டது. அதேபோல் 1997-98ம் ஆண்டில் மேற்கூறிய திட்டங்களின் கீழ் உழவர் பெருமக்களுக்கு ரூ.3,54,500/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1997-98ம் ஆண்டில் பசுந்தாள் உர விதை விநியோகத்திற்கு ரூ.7,500/-ம் புளூரோட்டனி பூஞ்சானம் கொண்டு எரு தயாரிக்க ரூ.18,760- இரசாயன உரம் பயன்படுத்தி கம்போஸ்ட் தயாரிக்க ரூ.1,21,444/- மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## பயிர் விளைச்சல் போட்டி

1997-98ம் ஆண்டில் நெல், நிலக்கடலை (மானாவாரி) உளுந்து (மானாவாரி) பச்சைப் பயிறு (மானாவாரி) பயிர்களில் அறுவடை செய்யப்பட்டு முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் ரூ.36,000/- வழங்கப்பட்டது.

## டான்வா

தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித்திட்டம் (டான்வா) டென்மார்க் நாட்டின் உதவியுடன், தருமபுரி மாவட்டத்தில் 1994-95ம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தருமபுரி, ஊத்தங்கரை, பாலக்கோடு, அரூர் மற்றும் கிருஷ்ணகிரியில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு,குறு விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த திருமணமான பண்ணை மகளிர் பயன்பெற்று வருகின்றனர். பண்ணை மகளிருக்குக் கிராம அடிப்படைப் பயிற்சி, சிறப்பு பயிற்சி, பண்ணை மகளிர் கருத்தரங்கு ஆகியவை நடத்தப்ப டுகிறது. கற்றுத் தரப்பட்ட தொழில் நுட்பங்களைக் கடைப் பிடிப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் சந்தேகங்களைப் போக்கத் தொடர்பணி நடிவடிக்கைப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

1996-97ம் ஆண்டு இத்திட்டத்தின் மூலம் பயிற்சிக்காக ரூ.9.83 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. 1997-98ம் ஆண்டு இத்திட்டத்தின் பயிற்சிகளுக்காக ரூ.9.77 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் இதுவரை 2,625 சிறு,குறு விவசாய குடும்பங்களைச் சார்ந்த பண்ணை மகளிரும், 20,250 சக பண்ணை மகளிரும் பயனடைந் துள்ளனர். உதவி வேளாண்மை அலுவலர் பகுதிகளில் 95 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

# ஒசூர் கால்நடைப்பண்ணை

தமிழகத்தின் கால்நடைப் பண்ணைகளுள் சிறப்பிற்குரிய இப்பண்ணை தருமபுரியில் உள்ள ஒசூரில் அமைந்துள்ளது. இப்பண்ணையின் வரலாறு நம் நாட்டின் வரலாற்றுடனேயே பின்னிப்பிணைந்துள்ளது. மைசூர் பேரரசர் திப்பு சுல்தானால், அவர் தம் படைகளுக்கு வேண்டிய நேர்த்தியான குதிரைகளை உற்பத்தி செய்ய துவக்கப்பட்டது. பின்னர் ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர் இப்பண்ணையின் இயற்கை அழகையும், வசதிகளையும், அயல்நாடுகளுக்கு ஒப்பான இதன் தட்பவெப்ப நிலையையும் அறிந்து இராணுவக் குதிரைகள் வளர்க்க பொருத்தமான இடம் எனத் தேர்வு செய்து, பேரரசர் திப்புவிடமிருந்து கி.பி.1824ல் கைப்பற்றி மேலும் விரிவுபடுத்தினர்.



கடல் மட்டத்திற்கு மேல் 3,015 அடி உயரத்தில் அமைந்துள்ள இப்பண்ணையின் மொத்தப் பரப்பளவு 1641.41 ஏக்கர் ஆகும். இப்பகுதியின் தட்பவெப்ப நிலை அதிக அளவு $30^0$ செ.கி. குறைந்த அளவு $15^0$ செ.கி. ஈரப்பதம் 30% மற்றும் ஆண்டு சராசரி மழை அளவு 84 செ.மீ. ஆகும்.

பண்ணையில் தற்பொழுது செயலாற்றி வரும் பிரிவுகள் :

### வம்சாவழிச் சோதனைத் திட்டம்

வம்சாவழிச் சோதனைத் திட்டமானது 1972ல் மைய அரசு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் தமிழக அரசே ஏற்று சிறந்த முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சோதனைத் திட்டம் அதிகப் பால் கொடுக்கும் இனமான "சிந்தி" இனத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டமானது காளைகளைச் சோதனை செய்யும் திட்டமாகும்.

காளைகள் பார்ப்பதற்கு வலிமையாகவும், திடகாத்திர உடலமைப்பு கொண்டவைகளாகவும் இருந்தால் கூட இது சிறந்த காளை என்று சொல்லி விட முடியாது. அதற்கு இருக்கும் பால் கொடுக்கும் திறன், அதற்குப் பிறக்கும் பெண் கன்றுகளுக்கு செல்கிறதா என்று சோதனை செய்யும் திட்டம் தான் இந்த வம்சாவழி சோதனைத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்ட பொலிகாளைகளைத் தான் சிறந்த காளைகள் என்று நிர்ணயம் செய்ய முடியும். இத்திட்டத்தினால் தான் பல நாடுகள் பால் உற்பத்தியை அதிகப்படுத்தி உள்ளன. ஒரு நாட்டினுடைய பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த வேண்டுமானால் இது போன்ற ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டாக வேண்டும்.

### கள வம்சாவழிச் சோதனைத் திட்டம்

இத்திட்டத்தில் சிறந்த அதிக பால் கொடுக்கக் கூடிய பசுவின் கன்று, காளைகளைத் தேர்ந்தெடுத்து அதிக அளவில் எங்கெங்கு பசுக்கள் அதிகம் உள்ளதோ, அப்பசுக்களுக்கு இக்காளைகளின் விந்துகளை செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் செலுத்தி, அதற்கு பிறக்கும் பெண் கன்றுகளைத் தேர்ந்தெடுத்துப் பெரும் அளவில் சோதனை செய்யும் திட்டமாகும். இதன் மூலம் பொதுமக்களுக்குச் சிறந்த பெண் கன்றுகள் கிடைப்பதுடன், பால் கொடுக்கும் திறன் அதிகரிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் உட்படுத்தப்பட்ட பொதுமக்களின் கால்நடைகளுக்கு இலவசக் காப்பீடும், கிடேரி கன்றுகளுக்குச் சில சலுகைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

### பால் பண்ணைப் பிரிவு

பால் பண்ணைப் பிரிவில் கலப்பினக் கால்நடைகள் (சிந்தி ஃபிரீசியன், சிந்தி ஜெர்சி) போன்ற கலப்பினக் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறன. மேலும் இப்பால்பண்ணைப் பிரிவில் சிறந்த கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்வதுடன், சிறந்த கலப்பினக் கிடாரிக் கன்றுகளும் உற்பத்தி செய்து காளை மற்றும் நாய்

பண்ணை எனப் பராமரிக்கப்படுவதுடன் இதில் உற்பத்தியாகும் பால் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**கால்நடை மருத்துவமனை**

இப்பண்ணையில் இருக்கும் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், அதனை உடனடியாக கவனிக்கும் பொருட்டு, இக்கால்நடை மருத்துவமனை இயங்குவதுடன், கால்நடைகளின் ஆரோக்கியத்தினைக் கருதி தடுப்பூசி போடுதல் குடற்புழு நீக்கம் செய்தல், நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்குச் சிகிச்சையளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆய்வுக்கூடப் பிரிவு**

நோய்வாய்ப்பட்ட கால்நடைகளின் இரத்தம், மலம், இதர நோய்களின் அறிகுறிகளை ஆராய இவ்வாய்வுக்கூடம் பயன்பட்டு வருகிறது.

**குதிரை வளர்ப்பு**

இப்பண்ணை, குதிரைகள் வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பண்ணையாகும். அதனால் இக்குதிரைகள் அழிந்துவிடக் கூடாதென்று கத்தியவார்தரோ கலப்பினக் குதிரைகளும், உயர் ரகக் குதிரைகளும், மைய அரசின் உதவியுடன், மாநில அரசு ஏற்று மிகச் சிறந்த முறையில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு, காவல்துறை, இராணுவத்துறை, விளையாட்டுத்துறை போன்ற அரசு ஏற்று நடத்தும் நிறுவனங்களுக்கு அனுப்பத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உறைவிந்து உற்பத்தி நிலையம்**

இப்பிரிவில் மத்தியப் பிரிவிலிருந்து அனுப்பப்படும் காளைகளின் விந்துவைச் சேகரித்து பரிசோதனை செய்து அவ்விந்துவை உறைவிந்துக் குச்சிகளாக உற்பத்தி செய்து, பாதுகாக்கப்பட்டு வருகிறது. நம் நாட்டினமான சிந்தி, காங்கேயம், அலிகார் போன்ற காளைகளின் உறைவிந்துக் குச்சிகள் பாதுகாக்கப்பட்டு வருவதுடன், விநியோகம் செய்யப்பட்டும் வருகிறது. உயரினக் காளைகளான ஃபிரீசியன், ஜெர்சி, தூய மற்றும் கலப்பினக் காளைகளின் விந்துகளை சேகரித்துச் உறைவிந்துக் குச்சிகளில் சேமித்துப் பாதுகாக்கப்பட்டு இம் மாநிலம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு 7.5 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இச்செயற்கை முறைக் கருவூட்டலினால் பொதுமக்கள் வளர்க்கும் பசுக்களுக்கு பிறக்கும் கன்றுகள் சிறந்தவைகளாக திகழ்வதுடன், பால் கொடுக்கும் திறனும் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

தொலைதூரக் கிராமங்களில் எங்கெங்கு செயற்கை முறைக்கருவூட்டல் இல்லையோ அங்கெல்லாம் கலப்பினக் காளைகள் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 160 காளைகள் அனுப்பப்பட்டுள்ளன.

**ஆட்டுப் பிரிவு**

இப்பிரிவில் கர்நாடக மாநில மாண்டியா இன ஆடுகளும், நியூசிலாந்து இன கோரிடேன் என்ற இனத்தினைக் கலப்பினம் செய்து, மாண்டியா தூய இனம், கோரிடேல் கலப்பினம் உற்பத்தி செய்யப்படுகிறது.

**செம்மறி ஆடு மாண்டியா தூய இனம்**

இது கறிக்குச் சிறந்த ஆடாக இருப்பதுடன், இதனுடைய உரோமம் கம்பளம் செய்யப் பயன்பட்டு வருகிறது. இதனுடைய பூர்வீகம், மாண்டியா மாவட்டம், கர்நாடக மாநிலம் ஆகும். தலை, கழுத்து செம்மன் நிறம் உடல் வெள்ளை நிறம். ஆண் ஆடு 35 லிருந்து 45 கிலோ எடை, பெண் ஆடு 30லிருந்து 35 கிலோ எடை உடையது ஆகும்.

**வெள்ளாடு**

கொடி, வள்ளி, ஜமுனாபாரி, தெலிச்சேரி போன்ற இனங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் உற்பத்தியாகும் நல்ல சிறந்த கிடாக்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஏழை விவசாயிகளுக்குச் சந்தை விற்பனை விலையை விட மிகக் குறைந்த விலையிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஏழை விவசாயிகள் அவர்கள் வளர்க்கும் ஆட்டின உற்பத்தித் திறனை அதிகரித்துப் பயனடைகின்றனர்.

**பன்றிப்பிரிவு**

இப்பிரிவில் பெரிய வெண்பன்றி இனமான யார்க்ஷயர், லேண்ட்ரேஸ், ஹேம்ப்ஷயர் போன்ற இனங்கள் இனவிருத்தி செய்யப்பட்டு பால்



மறந்த குட்டிகளை ஏழை விவசாயிகள் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையில் பன்றிகள் வளர்க்க அதிக அளவில் பன்றிக் குட்டிகள் வளர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இப்பன்றிகள் வளர்ப்பு அதிக இலாபம் தரக்கூடியது. தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் பன்றி இறைச்சி உண்ணும் வழக்கம் அதிகரித்து வருகிறது.



### கோழி விரிவாக்க நிலையம்

இப்பிரிவில் பேப்காக், எச்.எச்.260 போன்ற இனங்கள் முட்டைக்காக வளர்க்கப்பட்டு இம்முட்டைகள் இப்பண்ணையிலுள்ள உறைவிந்து பிரிவிற்கு வழங்கப்படுவதுடன், பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1 வாரக் குஞ்சுகள், 12 வாரக் குஞ்சுகள் முட்டையிடும் தருவாயிலுள்ள கன்னிக்கோழிகள், புழக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் எல்லா மாவட்ட விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கிரிராஜா, ஆர்.ஐ.ஆர் போன்ற கோழிகளும், நம் நாட்டினமான அசீல் என்ற பலவகை அசீல் இன சண்டைக் கோழிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, ஏழை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

வான்கோழி வளர்ப்புத் திட்டமும் விரைவில் செயல்படுத்தத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### புல்வெளிப் பிரிவு

இப்பிரிவில் இப்பண்ணையைப் பாதுகாக்கவும் காவல்புரியவும் காவலாளிகளை நியமித்தல், விருந்தினர் மாளிகை பராமரித்தல், காய்ந்த புல் கால்நடைகளுக்கு வழங்க ஏதுவாக வறட்சி மாதங்களுக்கும், மழைக் காலங்களுக்கும் தேவைப்படும் காய்ந்த புல்லை உற்பத்தி செய்து வழங்க இப்பிரிவு செயல்படுவதுடன், மேய்ச்சல் நிலங்களில் நல்ல சத்துள்ள புற்கள் வளர, மாடுகள் மேய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### தோட்டப்பிரிவு (விவசாயப் பிரிவு)

இப்பிரிவில் இப்பண்ணை கால்நடைகளுக்குத் தேவையான பசும்புல் வளர்ப்பு மற்றும் இதில் புரதச் சத்து மிக்க இனமான மக்காச்சோளம், காராமணி, குதிரை மசால், பெர்சிம், ஓட்ஸ், ஸ்டைலோ போன்றவைகளை உற்பத்தி செய்தும், வருடாந்திரப் பயிர்களான கோ.1, கோ.2, கோ.3, என்.பி.சாரி, கினியாபுல், ரோட்ஸ் புல், பாராபுல், கொழுக்கட்டை புல் போன்றவைகளை உற்பத்தி செய்து கால்நடைகளுக்குத் தேவைப்படும் அளவிற்கு வழங்கப்படுகின்றன.

எனவே, இவ்வகையில் நன்மை பயக்கும் இப்பணணை தமிழ் மக்களுக்கு - குறிப்பாக தருமபுரி மாவட்டப் பொது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகது.



★ ★ ★

# மகளிர் மேம்பாடு

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத் தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.



இத்திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் பொது அறிவினையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு மேம்பாட்டுக் கழகம் என்னும் அரசு நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தப்படுகிறது.

**தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுக்காக ஒரு தன்னிகரற்ற திட்டம், ரோம் நாட்டிலுள்ள 'பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தில்' (International Fund for Agricultural Development - IFAD) உதவியுடன் 1989ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் ஆசியாவிலேயே - அதிலும் குறிப்பாக இந்தியாவில் தருமபுரி மாவட்டத்தில் தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிரை முன்னேற்றுவதாகும். கிராம அளவில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கும் மகளிர் அனைவரும் குழுக்களாக அமைந்து, தங்களது முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்து, முன்னேறுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்தத் திட்டத்தில் 15 முதல் 20 பெண்கள் இணைந்து குழுக்களாகச் செயல்படுகின்றனர். இவ்வாறு பெண்கள் குழுக்களாக இணைந்து செயல்படுவதால் அவர்களது பொதுப்பிரச்சினைகளையும் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளையும் தங்களுக்குள் விவாதித்துத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், குழுவில் உள்ள பெண்கள் எந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று தாங்களாகவே முடிவு செய்ய இயலுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் (Non Governmental Organisation) இந்தக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இவற்றின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மெதுவாகவும் படிப்படியாகவும் உயர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மகளிர் குழுக்கள் அமைப்பதோடு மட்டுமின்றி, சமூக நலத்திட்டங்கள் குறித்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதும், சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றி எடுத்துக்கூறுவதும் இந்தத் திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும்.

குழுவின் சேமிப்பு நிதிக்காக, முறையாகச் சேமிப்பு செய்யும் பழக்கம் குழு உறுப்பினர்களிடையே வலியுறுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் அவர்களால் இயன்ற அளவு சேமிக்க வேண்டும். இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் குழுவின் பெயரில் வங்கிகளில் போடப்படுகிறது. ஒவ்வொரு சேமிப்புக் குழுவிலும் 20 உறுப்பினர்கள் இருப்பர். 18 முதல் 55 வயதுக்குள் இருக்கும் மகளிரே, அதிலும் குறிப்பாக, திருமணமான பெண்களே இந்தத் திட்டத்தில் சேரத் தகுதியுடைவர்களாவர்.

குழு உறுப்பினர்களது சொந்த அவசரத் தேவைகளுக்காகச் சிறு கடன்களைக் குழு சேமிப்பு நிதியிலிருந்து கொடுத்து உதவுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். வட்டி விகிதத்தையும் கடனை அடைக்கும் காலக்கெடுவையும் குழுவே தீர்மானிப்பதால் கிராமப் பெண்கள் தங்களது அவசரத் தேவைகளுக்காகத் தனி நபர்களிடம் மிக அதிக வட்டியில் கடன் பெறுவது தவிர்க்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இதுவரை 1,145 மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இதன்மூலம் 28,536 பெண்கள் உறுப்பினர் களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக்


24 தமிழரசு

குழுக்கள் ரூ.262.51 இலட்சம் தொகையைச் சேமிப்பாக வங்கிகளில் போட்டிருக்கிறது. இந்தக் குழுக்களின் மூலம் இதுவரை சங்கக் கடனாகச் சுழற்சி முறையில் ரூ.1102.38 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஊக்குநர்:**

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குநர் நியமிக்கப்படுவார். இவர் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதோடு, குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இந்த ஊக்குநருக்கு ஐபாட் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.180 மதிப்பூதியமாக அளிக்கப்படுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் இந்த ஊக்குநர்களுக்குச் சிறந்த முழுமையான பயிற்சி அளிக்கப்படும். ஊக்குநர்களின் பணியைக் கண்காணிக்க 12 முதல் 15 ஊக்குநர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். இந்த மேற்பார்வையாளர்கள் பெண்கள் குழுக்களை நல்ல முறையில் இயங்கச் செய்வதுடன் கிராமங்களிலுள்ள எல்லாக் குழுக்களும் முன்னேற்றம் அடைய வழிவகை செய்கிறார்கள்.

பட்டப்படிப்புப் படித்த பெண்களே மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு மாதம் ரூ.1,500 நிலையான ஊதியமாக வழங்கப்படுகிறது. மகளிர் குழுக்களுக்கும் திட்டத்துக்கும் இடையே ஒரு தொடர்பாளராக இருந்து செயல்படுவதும் மேற்பார்வையாளர்களின் ஒரு முக்கியப் பணியாகும்.

**கடன் உதவி:**

குழு உறுப்பினர்களின் வருகை, சேமிப்பு அளவு ஆகியவற்றைக் கண்காணித்து, குழுக்கள் நிலையான வளர்ச்சியை அடைந்த பிறகு (சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு), பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் மானியத்துடன் தருமபுரி மாவட்டத்திலுள்ள இந்தியன் வங்கியின் மூலம் இக்குழுக்களுக்குக் கடன்உதவி அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் விவசாயம், வேளாண் காடுவளர்ப்பு, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, பூச்செடி வளர்த்தல், கால்நடை மற்றும் கிராமக் கைத்தொழில்கள் போன்ற நிலம் சார்ந்த தொழில்களுக்கு மகளிர்க்குக் கடன்உதவி வழங்கப்படுகிறது. மேற்கண்ட தொழில்கள் சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

மானியமாக வழங்கப்படும் தொகை, பயன்பெறுபவரின் பெயரில் கடன் வழங்கப்படும் வங்கியிலேயே வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு, கடன் தொகை முழுமையாகச் செலுத்தப்பட்ட பின் மானியத்தொகை பயனாளிக்கு வழங்கப்படும்.

குழு உறுப்பினர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் தேவையான பயிற்சி அளிக்கப்படும். மேற்கொள்ளப்படும் தொழிலுக்கு ஏற்பப் பயிற்சியின் கால அளவும் மாறுபடும்.

**திட்ட ஒருங்கிணைப்புக் குழு:**

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட அலுவலரைச் செயலாளராகவும் கொண்டு ஒரு திட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் ஒருவரும், சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு இரு மாதத்திற்கு ஒருமுறை கூடி மகளிர் குழுக்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும்.

இது தவிர, விவசாய நிலம் உள்ள உறுப்பினர்களுக்கு, பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துதல், சுவர்கட்டுதல், குழாய் அமைத்தல் போன்ற வேளாண் பொறியியல் சம்பந்தமான தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படும். மேற்கண்ட வேளாண் பொறியியல் சம்பந்தமான பணிகளுக்குத் தேவையான மொத்தத் தொகையும் ஐபாட் திட்டத்தின் மூலமே கடனாக வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் தளி, கெலமங்கலம், சூளகிரி, தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர், அரூர், ஊத்தங்கரை, மத்தூர், ஒசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், வேப்பனப்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு மற்றும் பர்கூர் ஆகிய 18 வட்டாரங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 1998-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்.

இந்தத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் 21,190 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.1439.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-1999) 2,000 நபர்களுக்கு 70 இலட்சம் மானியத்துடன் ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டபடி, மகளிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த மாவட்டத்தில் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மகளிர் குழுக்கள் அமைத்து, உரிய பயிற்சிகள் வழங்கி சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட வைக்கப்படும். வங்கிகளிடம் நேரடியாகக் கடன்பெற்று குழு உறுப்பினர்கள் வாழ்வில் முன்னேற வழி செய்யப்படும். தற்போது 258 மகளிர் திட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 4,896 மகளிர்கள் குழு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்தச் சேமிப்பு 30-6-98 வரை ரூ.47.20 இலட்சங்கள் ஆகும். ★

# கி.பி.2000-க்குள் அனைவருக்கும் கல்வி

அத்தானி மண்டபத்திலே அதியமான் சத்தாக விழவேண்டும் என்று அருங்கனியாம் 'நெல்லிக் கனி'யை அவ்வையார் வழங்கிய தகடூர் மாவட்டத்தில் உள்ள பெண்களின் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளதால் **தொடக்கக் கல்வித் திட்டம்** இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் பெண்கள் 52.2% தருமபுரி மாவட்டம் 35.8%.

**திட்டத்தின் குறிக்கோள்கள்:**

பள்ளி வயது எய்திய குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களை 5ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கற்கச் செய்தல்.

ஒவ்வொரு நிலையிலும் குறைந்த அளவு கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் தரமான கல்வி அளிக்க வகை செய்தல்.

கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கப் போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**திட்டத்தின் செயல்பாட்டு விவரங்கள்:**

இத்திட்டம் 7 ஆண்டுகள் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கி மொத்தம் ரூ.40 கோடி நீண்ட காலக் கடன் அடிப்படையில் வழங்குகிறது. இதில் 85% மத்திய அரசும் 15%மாநில அரசும் ஏற்றுக்கொள்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் சிறப்பாக அமைய 97-98ஆம் ஆண்டில் 487 கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் 94-95 முதல் 96-97 வரை மொத்தம் 300 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 330 பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 5 ஒன்றியங்களில், மாற்றுப் பள்ளி மையங்கள் 247 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 6,686 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறன் அதிகரிக்க ஒரு ஆசிரியருக்கு ரூ.500 வீதமும், பள்ளி அடிப்படை வசதியை பெருக்க ஒரு பள்ளிக்கு ரூ.2,000 வீதமும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2,096 பள்ளிகளும், 6,531 ஆசிரியர்களும் பயன் பெற்று வருகிறார்கள்.

இம்மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திலுள்ள மகளிர் சங்கங்களைக் கொண்டு டி.பி.இ.பி.யின் நோக்கங்களைக் குறிப்பாக நலிந்த பிரிவு பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கும் ஊனமுற்ற குழந்தைகளை வாழ்க்கையில் உயர்த்தவும் டி.பி.இ.பி. பாடுபடுகிறது.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளின் கல்வித்தரம் உயர சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள் மாலை நேரங்களில் 303 மையங்களில் நடத்தப்பட்டு 7,175 மாணவிகள் பயனடைகிறார்கள்.

இத்திட்டத்தினால் இம்மாவட்டத்திலுள்ள 18 ஒன்றியங்களில் 18 ஒன்றிய பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையங்கள் மூலம் முதன்மைப் பயிற்சியாளர்களைக் கொண்டு அவ்வொன்றியத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிகள் மற்றும் பணிமனைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் கல்வித் தரம் உயர்த்தப்படுகிறது. பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது மற்றும் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கவைப்பது, தொடர்பாகப் பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் கல்வி விழிப்புணர்வு முகாம்கள் 96-97 மற்றும் 97-98ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும் நடத்தப்பட்டன.

இதன் மூலம் மாணவர்கள் சேர்க்கை 1996-97ஆம் ஆண்டு 2,87,723 ஆகும். 1997-98ஆம் ஆண்டில் 2,90,367 ஆக உயர்ந்துள்ளது. இடையில் நின்றவர்களின் சதவிகிதம் முறையே 1995-96ல் 23%, 1996-97ல் 20% ஆகக் குறைந்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குப் பிறகு மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால் தமிழக அரசால் 1995-96ல் 6 பள்ளிகள், 1996-97ல் 88 பள்ளிகள், 1997-98ல் 42 பள்ளிகள், 1998-99ஆம் ஆண்டில் 50 புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பள்ளியில் தயாரிக்கப்பட்ட உபகரணங்கள் - 1997ல் ஏப்ரலில் நாகபுரியில் நடைபெற்ற உபகரணங்கள் மேளாவில் தருமபுரி மாவட்டத்திற்கு இரண்டு பரிசுகள் கிடைத்துள்ளன.

மாநில அளவிலுள்ள கருத்தாளர்களைக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 4ஆம் வகுப்புப் பாட புத்தகங்கள் தயாரிக்கும் பணி சிறப்பான முறையில்ல முடிக்கப்பட்டுள்ளது.

பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாகப் பள்ளி வரைபடம் மற்றும் நுண்ணலகு திட்டப்பணிகளில் 2,096 தலைமை ஆசியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

முடிவாக படிக்காதவனெல்லாம் 'பதர்'; 'பிச்சை எடுத்தும் படிக்க வை'; 'வயிற்றுக்குச் சோறு வேண்டும். இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் கல்வி வேண்டும்' என்ற கவிஞர்களின் 'கனவு' இம்மாவட்டத்தில் நனவாகிறது என்பதில் ஐயமில்லை.

# பாலக்கோடு சர்க்கரை ஆலை

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வட்டங்களில் பாலக்கோடு வட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிக அளவில் இருந்து வந்தது. கரும்பு சாகுபடியாளர்களில் பலர் அருகில் உள்ள வெல்ல உற்பத்தியாளர்களுக்கே சரியான விலையில்லாமல் தங்கள் கரும்பைக் கொடுக்க வேண்டியிருந்தது. சிலர் பல இடையூறுகளுக்கிடையில் அதிகப் போக்குவரத்து செலவு செய்து சுமார் 150 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கோ அல்லது 110 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கோ தங்கள் கரும்பினை எடுத்துச்சென்று விற்று வந்தனர்.

இந்நிலையில் சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 1965 அக்டோபர் 2-ம் நாள் காந்தியடிகள் பிறந்த தினத்தன்று தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு தருமபுரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. கரும்பு சாகுபடியாளர்கள் தங்கள் விளைச்சலுக்குச் சரியான விலையைப் பெறவும் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இம்மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு 1966-ம் ஆண்டு மத்திய அரசு அனுமதி பெறப்பட்டது.

**பணியாளர்கள் விவரம்**

இவ்வாலையில் 778 நிரந்தரம் மற்றும் பருவகால ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**கணக்குகளும் நிதி நிலைமையும்**

ஆலை நிலைச் சொத்துக்களின் மதிப்பு ரூ.1,236.37 இலட்சம்.

**கரும்பு விலை**

1997-98 ஆம் ஆண்டு குறைந்த அடிப்படை விலையாக ரூ.484.50 மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாலை கரும்பின் விலை டன்னுக்கு ரூ.586.50 ஆகிறது. ஆனால் மாநில அரசு ரூ.660/- நிர்ணயித்துள்ளது. மாநில அரசால் 1997-98ஆம் ஆண்டு கரும்புக்கு ரூ.815.30 வழங்கப்பட்டு வருகிறது.

**கரும்பு பதிவும் கரும்பு உற்பத்தியும்**

இவ்வாலை நாள் ஒன்றுக்கு 2,000 டன்கள் கரும்பு அரைவை செய்யும் திறன் கொண்டது. இதன் 100%



அரைவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 3,44,000 டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட வேண்டும். கடந்த ஆண்டுகளில் அரைவை செய்த விவரம், 1996-97 ஆம் ஆண்டு 2,56,330 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு 3,98,585 டன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 115.9 விழுக்காடு ஆகும்.

**ஆலை விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகளும், கரும்பு அபிவிருத்தித் திட்டங்களும்**

ஆலைக்கு கரும்பு பதிவு செய்யும் ஆலை அங்கத்தினர்களுக்கு ஆலையின் மூலம் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகிறது.

**உயர்ரகக் கரும்பு மான்யம்**

நடவு/மறுதாம்பு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5/- வீதம் ஊக்குவிப்பு மான்யம் வழங்கப்படுகிறது.

**நாற்றங்கால்**

விவசாயிகளுக்கு நோயற்ற நல்ல தரமான விதைக்கரும்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக நாற்றங்கால் கரும்பு பயிர்செய்யப்பட்டு, இதன் மூலம் இளம் வயதுடைய தரமான விதைக்கரும்பு வழங்கப்படுகிறது. முதல் நிலை நாற்றங்கால் நடவிற்கு அங்கத்தினர்களுக்கு விதைக்கரும்புக்குண்டான முழுக் கிரயத்தொகையும், வாகன போக்குவரத்து செலவும் முழுமையாக ஆலையாரால் மான்யமாக வழங்கப்படும்

**நுண்ணுயிர் உரம் மான்ய விலையில் வழங்குதல்**

நுண்ணுயிர் உரம் மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் இயற்கை உரமாகவும் பயன்படுகிறது.

அசோஸ்பிரில்லம், அசிட்டோபேக்டர் மற்றும் பாஸ்போபேக்டீரியம் போன்ற உயர் உரங்கள் 50 சதம் மான்ய விலையில் ஆலையாரால் வழங்கப்படுகிறது.

**கரும்பு வயலில் களையைக் கட்டுப்படுத்துதல்**

கரும்பு வயலில் களையைக் கட்டுப்படுத்த களைக்கொல்லி மருந்து 25 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**பூச்சி மருந்துகள் மான்ய விலையில் வழங்குதல்**

பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு மருந்துகள் 25 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள் வழங்குதல்**

கரும்பைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள் 50 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**போக்குவரத்து வாடகை மான்யம்**

ஆலையிலிருந்து 10 கி.மீ. தூரத்திற்குமேல் கரும்பு பயிரிட்டு ஆலைக்கு பதிவு செய்து சப்ளை செய்யும் கரும்பு விவசாயிகளுக்கு 10 கி.மீ.க்கு மேல் உள்ள வாகன வாடகை ஆலையாரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மாநில அரசு இது தொடர்பாக மறு உத்தரவு வழங்கினால் அதன்படி செயல்படுத்தப்படும்.

**ஒருங்கிணைந்த உழவியல் பரிசோதனை வயல்கள்**

நமது பகுதிக்கேற்ப கரும்பு ரகங்களைக் கண்டறிய கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்த ஒருங்கிணைந்த உழவியல் பரிசோதனை வயல்கள் அமைக்கும் பட்சத்தில் ஏக்கருக்கு ரூ.3,000/- வீதம்

## சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை

## கோபாலபுரம், அரூர் வட்டம்

*முதலமைச்சர் கலைஞர் அவர்களால், ரூ.20 கோடி மூலதன மதிப்பீட்டில் இச்சர்க்கரை ஆலைக்கு 13.5.1990 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.33 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, 1992-93லிருந்து அரவை துவக்கப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.*

*ஆலையின் செயற்பாட்டு எல்லைகளாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள அரூர், பாப்பிரெட்டி வட்டங்கள், கிருஷ்ணாபுரம் பகுதியிலுள்ள 5 வருவாய்க் கிராமங்கள், சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்ட 2 வருவாய்க் கிராமங்கள், சேலம் வட்டம் 2, சூரமங்கலம், வலசையூர், காரிப்பட்டி, வாழப்பாடி மற்றும் பேரூர் பகுதிகள் ஆகியவைகள் உள்ளன.*

*தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ.1.34 கோடி செலவில், நாளொன்றுக்கு 27,440 யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்கும் திட்டமும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 19.6.98 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.*



பரிசோதனை வயல்களுக்கு ஆலையாரால் மான்யமாக வழங்கப்படுகிறது.

**கிராமக் கூட்டங்கள்**

திருந்திய கரும்பு சாகுபடி முறைகள் பற்றி விளக்குவதற்கும், விவசாயிகளின் கோரிக்கைகளை ஆராயவும் கிராமக் கூட்டங்கள் ஆலை அரைவைக் காலத்தில் ஒன்றும் அரைவையில்லாத காலத்தில் ஒன்றும் ஆக ஆண்டிற்கு இரண்டு கூட்டங்கள் ஒவ்வொரு கரும்பு கோட்டங்களிலும் நடத்தப்படுகிறது.

**அங்கத்தினர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துதல்**

50 முன்னோடி ஆலை அங்கத்தினர்களைத் தேர்வு செய்து திருந்திய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**கரும்புச் சாகுபடி அங்கத்தினர்களுக்குச் சர்க்கரை வழங்குதல்**

ஆலைக்கு 'சப்ளை' செய்யும் கரும்பு டன் ஒன்றுக்கு அரை கிலோ சர்க்கரை வீதம், கரும்பு வழங்கிய அங்கத்தினர்களுக்குச் சலுகை விலையில் சர்க்கரை வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரை விலை வெளி மார்க்கெட் சர்க்கரை எக்சைஸ் வரியில் கூடுதலே சலுகை விலையாக இருக்கும்.

**தொழில்நுட்பக் கையேடுகள் மற்றும் பிரதிகள் அச்சடித்தல்**

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருத்திய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் பற்றி கையேடுகள் மற்றும் பிரதிகள் அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**பாதை அமைத்தல்**

விவசாயிகளின் வயல்களிலிருந்து ஆலைக்குச் சுலபமாக கரும்பு எடுத்துவர ஆங்காங்கே புதிய பாதைகள் மற்றும் பழுதான பாதைகளை ஆலை மூலம் செப்பனிடப்பட்டு வருகிறது. கரும்புசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 9 சாலைகள் 50.026 கி.மீ. தூரம் மற்றும் ஒரு பாலம் ஆகியவை ரூ.170.70 இலட்சம் செலவில் இதுவரை அமைக்கப் பட்டுள்ளது. மேலும் 2.00 கி.மீ. சாலை மற்றும் ஒரு பாலம் ரூ.31.50 இலட்சம் செலவில் வெவ்வேறு கிராமங்களில் அமைக்கப்பட உள்ளது.

வட்டார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரு பாலம், ஒரு கல்வெர்ட் மற்றும் 25 சாலையும் ரூ.9,90,672 அமைக்கப்பட்டுள்ளது.

**கரும்பு சாகுபடி கடன்**

நடப்பு ஆண்டில் பதிவுக்கரும்பு சாகுபடி செய்யத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 2,481 அங்கத்தினர்களுக்கு, 3,701 ஏக்கர்களுக்கு ரூ.206.66 இலட்சங்களும், இதர வங்கிகள் மூலம் 571 அங்கத்தினர்களுக்கு 889 ஏக்கர்களுக்கு ரூ.62.55 இலட்சங்களும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**மண்வாரும் மற்றும் கட்டை பெயர்க்கும் இயந்திரம் அளித்தல்**

அங்கத்தினர்கள் தங்கள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக நாள் ஒன்றுக்கு குறைந்த வாடகை ரூ.90/- வசூலித்து மண்வாரும் இயந்திரம் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் மறுதாம்பு கரும்பு வெட்டிய பிறகு கரும்பு கட்டை பெயர்க்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ.350/- மட்டும்

கட்டணமாக வசூலித்து கட்டை பெயர்க்கும் இயந்திரம் அனுப்பப்பட்டு வருகிறது.

**தொழிலாளர் நலம் - விட்டு வசதி**

ஆலையின் வளாகத்தில் மொத்தம் 252 குடியிருப்புகள் கட்டப்பட்டு அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் வழங்கப் பட்டுள்ளது.

**மருத்துவ வசதி**

ஆலையின் வளாகத்தில் மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு ஒரு மருத்துவர், ஒரு மருந்தாளுநர், ஒரு பெண் செவிலியர் மற்றும் மூன்று உதவியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு மற்றும் அவரைச் சார்ந்துள்ள குடும்பத்தினருக்கும் மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப் படுகிறது. மேலும் ஆலையில் ஆம்புலன்ஸ் வேன் ஒன்றும் வாங்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**சீருடை மற்றும் காலணி**

ஆலையின் தொழிலாளர் களுக்கு இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மூன்று ஜோடி டெரிக்காட்டன் சீருடைகள், தையல் கூலியுடன் வழங்கப் படுகிறது. மேலும் தொழிலாளர் களுக்கு இராண்டாண்டிற்கு ஒருமுறை ஒரு ஜோடி காலணியும் மற்றவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு ஜோடி செருப்பும் ஆலையாரால் வழங்கப்படுகிறது.

**சிற்றுண்டிச்சாலை**

ஆலையில் உள்ள பணியாளர்களின் தேவைக்காக மிகக்குறைந்த விலையில் உணவுப்பண்டங்கள் ஆலை யினரால் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை மூலம் பணிநேரங்களில் அளிக்கப்படுகிறது.

**கூட்டுறவு சங்கங்கள்**

பணியாளர்களின் மளிகை சாமான்கள் தேவைக்கு ஒரு கூட்டுறவு பண்டகசாலையும், சேமிப்பு மற்றும் கடன்பெறும் வசதிக்கு ஒரு கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கமும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

**பொழுதுபோக்கு**

பணியாளர்களின் பொழுதுபோக்கிற்கான மூன்று மனமகிழ் மன்றங்களும் மற்றும் விளையாட்டு மைதானங்களும் உள்ளன. மனமகிழ் மன்றங்கள் மூலமாக வருடத்திற்கு ஒருமுறை ஆலை பணியாளர்கள் சுற்றுலா செல்கின்றனர். ஆலைப் பணியாளர்கள் மாநில அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளும் விருதுகளும் பெற்று வருகிறார்கள்.

**பள்ளிக் குழந்தைகளுக்கு வாகன வசதி**

பணியாளர்களின் குழந்தைகளின் கல்வி வசதிக்காகத் தருமபுரி மற்றும் பாலக்கோடு ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்றுவர வசதியாக இரண்டு பள்ளி வாகனங்களை ஆலை நிர்வாகம் இயக்கி வருகின்றது.



**பணியாளர் மற்றும் பொதுநலன்**

மெட்ரிகுலேசன் பள்ளி ஒன்று பணியா ளர்கள் மற்றும் பொது மக்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இப் பள்ளியில் 16 ஆசிரியர்கள் மற்றும் 3 உதவியாளர்கள் ஆகியோர் பணி புரிகின்றனர். இவர் களுக்கு அரசு சம்பளவிகிதத்தில் சம்பளம் அளிக்கப் பட்டு வருகிறது. இப்பள்ளியில் நடப்பு ஆண்டில் 284 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். சென்ற 1993-94 ஆம் வருடம் முதல் 10 வகுப்பு மாணவர்கள் அரசுத் தேர்வு எழுது அனுமதிக்கப்பட்டு அனைவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

**பல்தொழில்நுட்பப் பயிலகம்**

ஆலையின் விவசாய அங்கத்தினர் பிள்ளைகள், ஆலைத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மற்றும் இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் ஆகியோர் பல்தொழில் நுட்பப் பயிலக கல்வி வசதி செய்து இம்மாவட்டத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அங்கத்தினர்கள் வேண்டுகோளுக்கிணங்க தமிழக அரசு இந்த ஆலையில் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஒன்றைச் சுயநிதி ஏற்பாட்டின் கீழ் துவங்க அனுமதி வழங்கப்பட்டது.

• • •

தருமபுரி மாவட்டத்தில் 14365.00 ஏக்கர் பரப்பளவில் 22408 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பட்டு வளர்ச்சிக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை தருமபுரி மாவட்டத்தில் நிலவி வருவதே இதற்குக் காரணம் ஆகும். பட்டு வளர்ப்புத் தொழில் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏக்கருக்கு 5 நபர்கள் வீதம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

இந்த பட்டு விவசாயிகளினால் 45.00 இலட்சம் கிலோ கிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் ரூ.45 கோடி ஆகும். இது தவிர 10 கோடி உள்நாட்டின விதைக்கூடுகளும் 4 கோடி அயல் நாட்டின விதைக் கூடுகளும் தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூரில் உற்பத்தி செய்து தமிழ் நாட்டிலுள்ள 32 வித்தகங்களுக்கு (அரசு 10 மற்றும் தனியார் 22) அனுப்பப் படுகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான கலப்பினப் பட்டு முட்டைகளைத் தயார் செய்ய 5 அரசு வித்தகங்களும் 3 மத்திய பட்டு வாரிய வித்தகங்களும் 14 தனியார் வித்தகங்களும் ஆகமொத்தம் 22 வித்தகங்கள் செயல்படுகிறது. இவ்வித் தகங்கள் மூலம் ரூ.2.50 கோடி மதிப்புள்ள 1 கோடி நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளால் உற்பத்திச் செய்யப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய, தருமபுரி மாவட்டத்தில் 5 பட்டுக்கூடு அங்காடிகள் மூலம் 15 கோடி மதிப்புள்ள 17 இலட்சம் கிலோ பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப் படுகிறது.

இம்மாவட்டத்தில் 695 நூற்பு இயந்திரங்களும், 123 பட்டு முறுக்ககங்களும், 87 பட்டுக் கைத்தறிகளும் 95 பட்டு விசைத்தறிகளும் இயங்கி வருகிறது. இதன்மூலம் சுமார் ரூ.15 கோடி மதிப்புள்ள 1.50 இலட்சம் கிலோ கச்சாப்பட்டும், சுமார் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள 50,000 கிலோ பாவு மற்றும் ஊடை பட்டும் உற்பத்தி செய்யப் படுகிறது. பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றுதலில் சுமார் 4,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

பட்டுத் தொழிலை மேம்படுத்த அடிப்படை வசதிகள் தமிழ்நாடு அரசால் செய்து தரப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

**மல்பெரி விரிவாக்கம்:**

தருமபுரி மாவட்டத்தில் பட்டு விரிவாக்கப் பணிகளை மேற்பார்வை செய்யவும், அரசின் திட்டங்களை நிறைவேற்றவும் ஐந்து உதவி இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது.

உதவி இயக்குநர் அலுவலகம், தருமபுரி
உதவி இயக்குநர் அலுவலகம், கிருட்டிணகிரி
உதவி இயக்குநர் அலுவலகம், பென்னாகரம்
உதவி இயக்குநர் அலுவலகம், ஓசூர்
உதவி இயக்குநர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை

இவ்வலுவலகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம் 26 தொழில்நுட்பச் சேவை மையங்கள் செயல்படுகிறது. தொழில் நுட்பச் சேவை மைய அலுவலர்கள் விவசாயிகளை நேரடியாகத் தொடர்பு கொண்டு மல்பெரி நடுதல், பட்டுப்புழு வளர்ப்பு, தொழில் நுட்பங்கள் வழங்குதல், தேவைப்படும் பயிற்சி, முட்டைகள் வழங்கும் பணிகளைச் செய்கின்றனர்.

**வித்தகங்கள்:**

தருமபுரி மாவட்டத்திற்குத் தேவைப்படும் பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய 22 பட்டு முட்டை வித்தகங்கள் செயல்படுகிறது.

**அரசு பட்டுக்கூடு அங்காடிகள்:**

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை நியாய விலையில் விற்பனை செய்யவும், தொகையை விற்பனை செய்த அன்றே பெறவும் பட்டுக்கூடு அங்காடிகள் ஆறு இடங்களில் செயல்படுகிறது.

இவ்வங்காடியில் லெவித் தொகையாக விற்பனைத் தொகையின் மொத்த மதிப்பில் விவசாயிகளிடமிருந்து 0.75%ம், நூற்பாளர்களிடமிருந்து 0.75% வசூலிக்கப்படுகிறது.

**விதைப் பண்ணைகள்:**

பட்டுத் தொழிலுக்குத் தேவைப்படும் ஆதார விதைகளை உற்பத்தி செய்யப் பல்வேறு நிலைகளைக் கொண்ட விதைப் பண்ணைகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பண்ணைகளில் பி3, பி2, பி1 என்ற நிலைகளைக் கொண்ட விதை உற்பத்திப் பணிகள் செயல்பட்டு வருகிறது.

**விளக்கப் பண்ணைகள்:**

பட்டுத் தொழிலை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த அரூரில் ஒரு பட்டுப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

**பயிற்சிப் பண்ணை:**

விவசாயிகளுக்கு தேவைப்படும் பட்டுத் தொழில் சம்மந்தமான பயிற்சி அளிக்க சோகத்தூரில் (தருமபுரி) ஒரு பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.



**பட்டு நூற்பகங்கள்:**

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளின் ஒரு பகுதியைக் கொள்முதல் செய்து நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழிலை விளக்கி, அத்தொழிலை ஊக்குவிக்க ஓசூர், சோகத்தூர் ஆகிய இடங்களில் நூற்பு மற்றும் முறுக்கேற்றும் தொழிலை அரசே மேற்கொண்டுள்ளது.

**பட்டு நூற்பு பயிற்சி மையங்கள்:**

புதிய தொழில் முனைவோர்கட்கு பட்டு நூற்புத் தொழிலில் பயிற்சியளிக்க பென்னாகரம் மற்றும் ஓசூரில் பட்டு நூற்புப் பயிற்சி மையங்கள் செயல்படுகிறது.

**அரசு பட்டு பயிற்சிப்பள்ளி:**

துறையின் அலுவலர்கட்கு வளர்ந்து வரும் புதிய தொழில் நுட்பங்கள் அவ்வப்பொழுது விளக்கவும், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் ஓசூரில் ஒரு அரசு பட்டுப் பயிற்சிப்பள்ளி துணை இயக்குநர் மேற்பார்வையில் செயல்படுகிறது.



**1998-99ஆம் ஆண்டின் பட்டு வளர்ச்சிப் பணிகள்:**

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் பரிந்துரைத்து, திட்டக் கமிஷனுக்கு அனுப்பிய பிரேரணையில் தெரிவித்துள்ளதற்கு இணங்க, நடப்பு ஆண்டில் 2028.00 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட உள்ளது.

இதனால் 4,000 விவசாயக் குடும்பத்தினர் நேரடியாக பயன்பெறுவர். மல்பெரி நடவுப் பணி ஜூலை '98 முதல் ஆரம்பித்து டிசம்பர் '98க்குள் முடிக்கப்படும்.

**கடன் வசதி:**

வங்கிகள் மூலம் மானியமில்லாக் கடன் 1,000 நபர்கட்கு ரூ.144.20 இலட்சம் கடனாக வழங்கப்பட உள்ளது. வங்கி மூலம் போதிய நிதி ஒதுக்கீடு வங்கிகள் கடன் திட்டத்தில் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

**பகுதி - 2ன் திட்டங்கள்:**

1998-99ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டிற்குத் திட்ட ஒதுக்கீடாக ரூ.50.350 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**மல்பெரி விரிவாக்கம்:**

தற்பொழுது பயிரிடப்பட்டுள்ள எம்-5 மற்றும் லோக்கல் இன மல்பெரிக்குப் பதிலாக உயர் விளைச்சல் கொண்ட வி-1, எஸ்.36, எஸ்-13 ஆகிய மல்பெரி இனங்களைப் பயிரிட இத்திட்டம் உதவி செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் பயன்பெறுவர். விவசாயிகளுக்கு புதிய ரக இனங்களை வெளியிலிருந்து பெற்று, விதைக்குச்சிகள் இனாமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் தமிழகத்தில் 1,200 விவசாயிகள் ரூ.8 இலட்சம் அளவில் பயன்பெறுவர்.

**புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்:**

புதிய விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி வழங்கப்படும் இரு நாட்களுக்கும் தங்கும் செலவு, உணவு, பட்டு வளர்ப்பு வெளியீடுகள் ஆகியவற்றிற்கு ஒரு விவசாயிக்கு ரூ.250 வீதம் செலவு மேற்கொள்ளப்படும்.

பயிற்சியின் முதல் நாளில் மல்பெரி நடவு, புழு வளர்ப்பு பயிற்சியும், இரண்டாம் நாள் மல்பெரி வளர்ப்பை ஒட்டிய சுற்றுலா மேற் கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 1375 புதிய விவசாயிகளுக்கு ரூ.3.44 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

**சிறிய பட்டு நூற்பாளர்கட்கு நிதி உதவி:**

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு பகுதியில் 7 சிறிய நூற்பாளர்கள் (ஏழ்மை நிலையில் உள்ளவர்கள்) பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். 14 சர்க்கா ஏனங்கள் நிறுவப்படும். இதனால் 35 நபர்கட்கு தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

இதனால் நூற்பாளர்கட்குத் தொடர்ந்து நூற்புத் தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும் இதற்கென ரூ.5.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ❑

# ஒசூர் வீட்டுவசதி வாரியம்

தமிழகத்தில் பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்றான தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மக்கள்நல மேம்பாடு திட்டங்களின் மூலம் மகத்தான முன்னேற்ற பாதையில் வழிநடத்திச் செல்கிறார்கள். வளர்ந்து வரும் இம்மாவட்டத்தில், பெருகிவரும் மக்கட்தொகையின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை மகத்தான பணிகளைச் செய்துள்ளது. மேலும் செய்து வருகிறது. இதுவரை அதாவது 1996 மே திங்களுக்கு மேல் நிறைவேற்றிய திட்டங்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள், நடைபெற உள்ள திட்டங்கள் பின்வருமாறு:

**1996 மே திங்களிலிருந்து திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திட்டங்கள்:**

| திட்டத்தின் பெயர் | வீடுகள் மனைகள் | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| ஒசூர் பகுதி-6 | 65 வீடுகள் | 185.70 |
| ஒசூர் பகுதி-7 | 100 வீடுகள் | 481.59 |
| கிருஷ்ணகிரி | 100 வீடுகள் | 215.81 |
| ஒசூர் பகுதி-7 | 627 மனைகள் | 788.07 |
| ஒசூர் பகுதி-16 | 1589 மனைகள் | 2084.77 |
| மொத்தம் | 2481 | 3655.84 |

**நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்:**

| திட்டத்தின் பெயர் | வீடுகள்/நில அபிவிருத்தி | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| ஒசூர் | 664 வீடுகள் | 602.53 |
| கிருஷ்ணகிரி | 213 வீடுகள் | 641.25 |
| தர்மபுரி ஏ.ஜெட்டிஹள்ளி நிலை-2 | 257 மனைகள் | 235.20 |
| மொத்தம் | 1134 | 1478.98 |

**தருமபுரி மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத்தின் நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் விவரம்:**

"அனைவருக்கும் வீடு" என்ற அரசின் திட்டத்திற்கிணங்க - இதுவரையில் தருமபுரி மாவட்டத்தில் 1150.53 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 8581 குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு மக்கள் பயனடைந்துள்ளனர். இவையன்றி 1148 வீடுகள் மற்றும் 6173 மனைகள் அபிவிருத்தி திட்டம் செயலாக்கத்திலும், எதிர்காலத் திட்டத்திலும் உள்ளது.

எதிர்கால அபிவிருத்திக்காக ஒசூர் நகரப் பகுதியில் 1,259 ஏக்கர், பாகலூர் பகுதியில் 10 ஏக்கர், கிருஷ்ணகிரியில் 113 ஏக்கர், தருமபுரியில் 20 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடியிருப்பு வசதியை அனைத்துத் தரப்பு மக்களும் பெற்றிட வேண்டும் என்ற அரசின் சீரிய கொள்கைக்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தருமபுரி மாவட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ★



# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

★ இவ்வங்கியின் மூலம் குறுகியகாலக் கடனாகக் கடந்த ஆண்டில் ரூ.46.67 கோடியும், இவ்வாண்டில் இதுவரையில், ரூ.20.68 கோடியும் வழங்கப் பட்டுள்ளது.

★ இதேபோன்று, கடந்த ஆண்டில் ரூ.20.65 கோடியும், இந்நிதியாண்டில் இதுவரையில், ரூ.2.38 கோடியும் மத்தியகாலக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன.

★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம், 1,835 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி நிதியுதவியளிக்கப் பட்டுள்ளது.

★ 246 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம், சங்க உறுப்பினர் ஒருவர்க்கு 2 கறவை மாடுகள் வாங்க ரூ.18,000 வீதம் சுமார் 18 கோடி ரூபாய் மத்தியகாலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ 30 விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்கக் கடனுதவியாக ரூ.93 இலட்சம் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

★ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்திட்டத்தின் கீழ் குறைந்த வட்டி விகிதத்தில் (8%) 81 நபர்களுக்குத் தொழிற்கடனுதவியாக ரூ.31 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ நடுத்தர விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கென, வேளாண் மற்றும் வேளாண் சார் தொழில்களுக்கென, "வேளாண் தற்காப்பு வேலை வாய்ப்புப் பண்ணைத்திட்டத்தின்" கீழ், ஒருங்கிணைந்த திட்ட மதிப்பீடாக ரூ.6.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்கிட, தொடக்க வங்கிகளுக்கு ரூ.3 கோடியும், நகைக் கடனாகக் கடந்த ஆண்டில் ரூ.53.25 கோடியும், இவ்வாண்டில் ரூ.12.51 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

★ 7 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.95 இலட்சம் காசுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ.2.61 கோடி காசுக் கடனாக அனுமதிக்கப் பட்டுள்ளது. பொது வினியோகத் திட்டத்தைத் திறம்படச் செயற்படுத்திட அனைத்துத் தொடக்க வங்கிகளுக்கும் ரூ.3.75 கோடி காசுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.17 கோடியும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.35.20 கோடியும் காசுக் கடன்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன.



தருமபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளியில் மூதறிஞர் ராஜாஜி நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை

★ ஊத்தங்கரை கூட்டுறவு நூற்பாலைக்கு ரூ.3.80 கோடி காசுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 754 பயனாளி களுக்கு ரூ.92 இலட்சம் கடனுதவிகள் அளிக்கப் பட்டுள்ளன.

★ பண்ணை சாரா மற்றும் சிறு வாகனக் கடன்களாக ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு குறைந்த வட்டியில் (15%) மிக அதிக அளவில் பெண்கள் பயனடைந்திடும் வகையில் தலா ரூ.2,000 வீதம் 2,779 நபர்களுக்கு ரூ.43 இலட்சம் கடனுதவிகள் அளிக்கப் பட்டுள்ளன.

★ வங்கிச் சேவையை நவீனமயமாக்கிடும் வகையில், தலைமையகம் மற்றும் 22 கிளைகளின் கணக்குகள் பராமரிப்பு, கணிப்பொறிமயமாக்கப் பட்டுள்ளது. டெலக்ஸ், ஃபேக்ஸ் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

*கிழக்குத் தொடர்ச்சி மலை - மேற்குத் தொடர்ச்சி மலை இரண்டும் ஒன்றுகூடும் தருமபுரி மாவட்டம் வனவளம் மிக்கது ஆகும்; மாவட்டத்தின் மொத்தப்பரப்பான 9,645சதுர கிலோ மீட்டரில் - 1,700 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் காடுகளே பரவியுள்ளன.*

# தாட்கோ

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களை 'தாட்கோ' நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

**தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்**

இந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களிடையே தனி நபர் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக இத்திட்டத்தின் கீழ் உயர்ந்த பட்சமாக தலா ரூ.5,00,000 வரை நிதியுதவி செய்து தரப்படுகிறது. இதில் தாட்கோ மானியம் அதிகபட்சம் ரூ.25,000 அல்லது திட்ட மதிப்பீட்டில் 30 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகையுடன் திட்ட மதிப்பீட்டில் 20 சதவீதம் தாட்கோ விளிம்புத் தொகையாகவும் இதில் அதிகபட்சம் ரூ.1,25,000 வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் லாரிகள், சுற்றுலா வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷா, வேன் மற்றும் டிராக்டர் போன்ற வாகனக் கடன்களும் இயந்திரக் கலப்பை, கதிரடிக்கும் இயந்திரம் போன்ற சாதனங்கள் வாங்கவும், கோழிப் பண்ணை, பால்பண்ணை ஏற்றுமதிக்கான ஆயத்த ஆடைகள் தயாரித்தல், கல்உடைத்தல், தளவரிசைக் கற்கள் மெருகு ஏற்றுதல், சிறு மருத்துவமனைகள் அமைத்தல் போன்ற பல்வேறு தொழில்களுக்காகவும் நிதிஉதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 97 பயனாளிகளுக்கு ரூ.26 இலட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதுவரை, 79 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

**விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள்**

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, டீசல் மற்றும் மின்சார பம்ப் செட்டுகள் வாங்கவும் உழவு மாடுகள், டயர்வண்டி மாடுகளுடன், பவர் ஸ்பிரேயர் வாங்கவும் 50 விழுக்காடுகள் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி கடந்த 2 ஆண்டுகளில், 359 பயனாளிகளுக்கு, ரூ.21 இலட்சமும், இவ்வாண்டில் இதுவரையில் 177 பயனாளிகளுக்கு ரூ.12.50 இலட்சமும் நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளன.

**சிறுதொழில் திட்டம் 20 அம்சத்திட்டத்தின் கீழ் உள்ள திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் காய்கறி வியாபாரம், கூடையில் பழ வியாபாரம், தள்ளுவண்டிப் பொருள்கள் வியாபாரம் போன்ற தொழில்களுக்குக் கடன்உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உயர்ந்த பட்ச திட்ட மதிப்பீடு ரூ.2,000, ஆகும். இதில் ரூ.1,000/- தாட்கோ மானியமாக வழங்கப்படுகிறது. மீதம் ரூ.1,000/- வங்கிக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் 70 நபர்களுக்கு ரூ.70,000 நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது.

**சிறுதொழில் தொடங்க திட்டம்**

இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்படி சுயதொழில் சிறு அளவில் தொடங்க ரூ.10,000/-



மொத்த மதிப்பீட்டில் ரூ.5,000/- மான்யம் மற்றும் ரூ.5,000/- வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் இதுவரையில் 8 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

**சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

இத்திட்டம் தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிட இளைஞர் மற்றும் மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் மிக முக்கியமான வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இளைஞர் மற்றும் மகளிர்களுக்கு ஆறுமாத காலத்திற்கு சுயதொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ.350/- ம் நிறுவனத்தாருக்குப் பயிற்றுவிக்கும் தொகை ரூ.200/- மற்றும் மூலப்பொருள் வாங்க ரூ.75/-ம் வழங்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் ஒவ்வொரு வருக்கும் ரூ.600/- மதிப்புள்ள தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் அரசு தொழில் பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. சுயதொழில் தொடங்குவோர்க்கு தாட்கோ மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கி, தொழில் தொடங்க உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தினடிப்படையில் கடந்த 2 ஆண்டுகளில் ரூ.5.72 இலட்சம் செலவில் 152 ஆதிதிராவிட இளைஞர் களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ.5.7 இலட்சம் செலவில் 130 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் தையற்பயிற்சி ரேடியோ, டி.வி.பழுதுபார்த்தல், கணிப்பொறிப் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, லேப்டெக்னீஸியன் மற்றும் மோட்டார் போன்ற பயிற்சிகள் பெற்று வருகிறார்கள்.

**என்.எஸ்.எப்.டி.சி. (தேசிய பட்டியலினத்தோர் நிதியுதவி மற்றும் மேம்பாட்டுக் கழகம், புதுதில்லி)**

இப்புதிய திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் வாகனம் வாங்க கடன் முழுமையாகத் தாட்கோ மூலம் வழங்கப்படவுள்ளது. இதில் லாரி, மினிலாரி, டூரிஸ்ட் வேன், கார், ஆட்டோ, பிக்அப் வேன், டிராக்டர் முதலான அனைத்து வாகனங்களும் வாங்க நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு இந்து, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் தகுதியுடையவர்கள். இவர்களுக்கு வருட வருமானம் கிராமப்புறத்தில் ரூ.22,000/- நகர்புறத்தில் ரூ.23,700/-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். திட்ட மதிப்பில் 5% தனி நபர் தொழில் முதலீடு செய்ய வேண்டும். சொத்து ஜாமீன் 25% அல்லது பணவிடையாக 12.5% செலுத்த வேண்டும். திட்ட மதிப்பில் அதிக பட்ச மானியமாக ரூ.25,000/-மும், 4% வட்டி விகிதத்தில் 20% விளிம்புத் தொகையாகவும் அதிக பட்சம் ரூ.1,25,000/- மீதத் தொகை 6% வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், 9 பயனாளிகளுக்கு ரூ.28.66 இலட்சம் நிதியுதவியளிக்கப் பட்டுள்ளது.

**துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டம் 1992-ம் ஆண்டு முதல் மத்திய அரசால் துவக்கப்பட்டு மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை விடுவித்து வேறு பல தொழிற்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மறு வாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் அரசு ஆணைப்படி இத்தொழிலில் ஈடுபட்டோர்களது எண்ணிக்கை கணக்கெடுப்பு 1990-91ம் ஆண்டில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில், இத்தொழிலில் 136 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு உள்ளது. இக்குடும்பங்களில் உள்ளோரின் மொத்த நபர்களின் எண்ணிக்கை 1035. இவர்களில் 328 பேர்கள் ஆண்கள், 270 பேர்கள் பெண்கள் மற்றும் 437 பேர்கள் சிறுவர்கள். இதுவரையில் ரூ.21.50 இலட்சம் நிதியுதவியில், 140 நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் பெண் குழந்தைகளுக்கான கல்வி ஊக்குவிப்புத் திட்டம்**

கிராமப்புற இந்து, ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மிகவும் ஏழை குடும்பத்தில் உள்ள பெண் குழந்தைகள் 2-ஆம் வகுப்பிற்குப் பின் நின்றுவிட நேர்வதால் அவர்கள் தொடர்ந்து படிக்க கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதில் 3-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்க மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் பத்து மாதத்திற்கு மட்டும் ரூ.500/- ஒரு குழந்தைக்கு அளிக்கப்படுகிறது.

அடுத்து 6வது வகுப்பு கல்வியை நிறுத்தாமல் தொடர்ந்து படிக்க வசதியான ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் பத்து மாதத்திற்கு ரூ.1,000 ஒரு குழந்தைக்கு வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொகைகளை அக்குழந்தைகளின் தாயார் பெயரில் அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிகவும் வறுமையில் உள்ள ஏழை ஆதிதிராவிட குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் விதவைத் தாயார் குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், பள்ளிக்கு வெகுதூரத்திலிருந்து வரும் குழந்தைகள் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 1996-97ஆம் ஆண்டு 4,899 மாணவிகளும், 1997-98 ஆம் ஆண்டு 4,889 மாணவிகளும் பயனடைந்தனர்.

**வணிக வளாகக் கட்டடங்கள்**

இம்மாவட்டத்தில் பர்கூர், காவேரிப்பட்டினம், காரிமங்கலம், கெலமங்கலம், பாலக்கோடு. ஆகிய ஐந்து பேரூராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில் தாட்கோ மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக 48 வணிக வளாகக்கடைகள் ரூ. 25 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

மேற்கண்ட வணிக வளாகக் கடைகள் பொது ஏலத்தில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மக்களுக்கு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ★



# காவிரியாள் கால்பதிக்கும் மாவட்டம்

- பாவலர் கருமலைத் தமிழாழன்

வெண்மஞ்சு பொதிமிதக்கும் கல்லின் மீது
        வெண்மதியின் ஒளிநழுவி விழுதல் போலக்
கண்ணாடி மீனேறும் அருவி கொட்டக்
        காவிரியாள் கால்பதிக்கும் ஒகே னக்கல்
கண்ணொளியை வழங்கியநல் **கருணா நிதி**தம்
        கருணையினால் மின்னொளியின் திட்ட மிங்கே
கண்சிமிட்டக் காத்துளது! குடிக்கும் நீராய்க்
        கடுகிகுழாய் புகுந்துவரப் பார்த்துளது!

புறமுதுகு காட்டாதத் தமிழர் வீரம்
        புலப்படுத்தும் புறநானூறு புகழைப் போற்ற
அறம்வழுவா அதியன்செந் தமிழைப் போற்ற
        அருநெல்லிக் கனியமுதை ஔவைக் கீந்து
சிறப்புற்ற தகடூராம் தருமபுரியில்
        சிதையாமல் வரலாற்றைச் சித்தி ரிக்கும்
அறமுரைத்த வள்ளுவனார் கோட்டம் போல
        அதியமான் கோட்டத்தின் அழகு கொஞ்சும்!

வீரத்தின் வரலாற்றை எழுத வைத்த
        இருளபட்டி நடுகற்கள்; தலையைக் கொய்தே
ஆரமெனத் தந்தநவ கண்டம் காட்டும்
        அருஞ்சிற்பக் குந்தாணி; புதிய பாணி
பாரமகால் கோட்டைகள்; குகையி னுள்ளே
        பண்டையோவி யம்திகழும் மல்லப் பாடி
போரணியாய் விழுப்புண்பூண்ட பெரும்பாலை
        போன்றபல ஊர்களுடன் திகழ்மா வட்டம்!

தலையில்லா முண்டத்தில் சண்டை யிட்ட
        தனிச்சரிதச் சின்னமெனும் செய்து பாட்சா
மலையிருக்கும் ஒருசாணாம் குளத்து நீரோ
        மலர்த்தேனின் சுவைமிஞ்சும்! பந்தர் தொங்கும்
குலைதிராட்சை மாங்கனியின் விளைச்சல் விஞ்சும்
        குறுகுறுத்து நடைபயிலும் பெண்ணை யாற்றின்
அலைதடுக்கும் முத்தூரின் அணையால் பசுமை
        அணிபுனைந்த கிருட்டினகிரி எழிலின் தோட்டம்!

சித்தர்கள் வாழ்ந்தமலை மூலி கைகள்
        செழித்திருக்கும் தீர்த்தமலை; பாடல் பெற்ற
சந்திரசூ டேசுவரர் அருளும் மலை
        சாதிமதப் பேதமின்றிக் களிதெலுங்கும்
சிந்தையொன்றிக் கன்னடமும் கைகள் கோத்துச்
        சிரிக்கின்றப் பன்னூறு தொழிற்கூடங்கள்
சந்தனமாய் மும்மாநிலப் பண்பில் மணக்கும்
        சந்ததியர் வாழ்ஒசூர் பட்டின் பேரூர்!

தீரமுடன் வெள்ளையனை எதிர்த்தத் தீர்த்த
        கிரியாரை; சிறைக்குள்ளே அடைத்து வைத்தும்
வீரமுடன் போராடிப் பெருநோய் பெற்ற
        தியாகிசுப்ர மண்யசிவா; அடிமை யென்ற
வேரறுக்க வேதாரண்ய உப்பெ டுத்த
        மூதறிஞர் இராஜாஜி என்றே நாட்டின்
பேரதனை உயர்த்திநின்ற சான்றோர் தம்மைப்
        பெற்றதனால் புகழ்கொண்ட நல்மா வட்டம்!

# வனம் சார்ந்த மக்களின் வாழ்வில் ஒரு புதுவசந்தம்!



அதிகமான வனப்பரப்பைக் கொண்டுள்ள மாவட்டமாக தருமபுரி மாவட்டம் திகழ்கிறது. இங்குள்ள 3,660 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள வனப்பகுதி மாவட்ட நிலப்பரப்பில் சுமார் 38% நிலப்பரப்பை அடக்கியுள்ளது. இந்த விதத்தில் தருமபுரி மாவட்டம் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வளவு வனப்பரப்பு இருப்பினும், தருமபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகிறது. ஏராளமான வனப்பரப்பு கொண்டுள்ளதால், இங்குள்ள மக்களில் ஏராளமானோர் வனத்தைச் சார்ந்து வாழ்வது இயற்கையே. இந்நிலையில், வனத்துறை, மக்கள் ஈடுபாடின்றி செயல்படுத்தும் திட்டங்கள் முழு வெற்றியைக் காண்பது சமீப காலத்தில் அரிதாகிவிட்டது. எனவே மக்கள் ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படும் விதத்தில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டி, ஒரு புதுமையானத் திட்டத்தை தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில் தமிழக அரசு ஜப்பானிய நிதி உதவியுடன் சென்ற ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் கிராம மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த ஓர் ஆண்டில், இத்திட்டத்தில் கிராம மக்களுக்காக, கிராம மக்களுடன் இணைந்து செயல்படுத்திய சில அடிப்படை வசதி முன்னேற்றப் பணிகள் குறித்து இக்கட்டுரையில் தொகுத்து வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 1997-98 நிதியாண்டில் 22 திட்டக் கிராமங்களும், நடப்பு ஆண்டில் 17 திட்ட கிராமங்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

**திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

1. தரம் குன்றிய காடுகளை நீர்பிடிப்புப் பகுதி (Water-shed) அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.
2. அவ்வனத்தைச் சார்ந்துள்ள கிராம மக்களால், ஒரு கிராம வன நிர்வாகக் குழு மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.
3. கிராம வன நிர்வாகப் பகுதி நுண்ணிய நீர்பிடிப்புத் திட்டம் குறித்து, கிராம வனக்குழுவுடன் கலந்து, நுண்ணிய திட்டம் (Micro-Plan) பங்கு பெறும் கிராமிய மதிப்பீடு (Participatory Rural Appraisal P.R.A.) அடிப்படையில் தயார் செய்யப்படும்.
4. கிராம வனக்குழு விருப்பப்படி, உள்ளூர் மக்களைக் கொண்டு திட்ட வேலைகள் செயல்படுத்தப்படும்.
5. திட்ட வேலைகள் மொத்த மதிப்பீட்டில் சுமார் 10% தொகை கிராம நலன் மற்றும் மேம்பாட்டிற்கு மக்கள் விருப்பப்படி செலவிடப்படும்.
6. கிராமம் சார்ந்த வனப்பகுதியில் (சுமார் 700 ஏக்கர்) உள்ள தாங்கும் விளைச்சல் பொருள் வருவாய் (Sustained Yield) அனைத்தும் கிராம மக்களுக்கே சேரும்.

**கிராம மக்கள் பங்கின் அவசியம்:**

வனத்துறையில் 150 ஆண்டு வரலாற்றில், வனம் சார்ந்த கிராம மக்களுக்கு நேரடியாகப் பயன்பெறும் விதத்தில் எந்தத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தாத காரணத்தாலும், கிராம மக்களின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதில் வனத்துறை ஈடுபடாமையாலும், கிராம மக்களுடன் வனத்துறையின் தொடர்பு சுமூகமாக இருக்கவில்லை. இதனால் வனப்பாதுகாப்பில் கிராம மக்களின் ஈடுபாடு இல்லாமையால், வனச் செல்வங்களை அளவிற்கு மேல் பயன்படுத்தியதன் விளைவாக வன அழிவும் ஏற்பட்டு வந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே, கிராம மக்களுடன் இணைந்து வன மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் விதத்தில் ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் ஆலோசனையின் பேரில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், ஜப்பானிய நிதி உதவியுடன் ஒரு 5 ஆண்டுத் திட்டம் ரூ.500 கோடி நிதியுடன் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

**கிராம மக்களின் ஈடுபாட்டினைப் பெறுதல்:**

பொதுவாக வனத்தை ஒட்டியுள்ள கிராம மக்கள் பெரும்பாலும் வறுமையிலேயே உள்ளனர். அக்கிராமங்களுக்கு நிறைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இந்நிலையில், இத்தேவைகள் வனத்துறை மூலம் பூர்த்தி செய்யப்படின், நிச்சயம் அக்கிராம மக்களின் ஈடுபாடு வன மேம்பாட்டிற்குக் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டே, கிராம மக்களின் மிக அத்தியாவசியத் தேவைகளையும், பல ஆண்டு காலமாக நிறைவேறாமல் ஏங்கித் தவிக்கும் குறைகளையும், பங்கு பெறும் கிராமிய மதிப்பீடு (P.R.A) மூலம் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மூலம் பிற துறைகளின் உதவியினாலோ செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு ஒவ்வொரு திட்ட கிராமமும் தத்தெடுக்கப்பட்டு அதற்குரிய நுண்திட்டமும் தயார் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில், நிர்வாகப் பகுதியில் உள்ள கிராம வனப்பகுதியில் கிடைக்கும் வன வருவாய் கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதன் காரணமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த ஆண்டு முதல் ஏராளமான கிராம முன்னேற்றப்பணிகள், அக்கிராம மக்கள் எதிர்பாரா விதத்தில் கிடைத்துள்ளன. இத்திட்டத்தில் மற்றொரு சிறப்பு அம்சம், இத்திட்டத்தில் பல அரசு சாரா பொதுநல நிறுவனங்களை (N.G.O.) ஈடுபடுத்தி மக்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. கடந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட சில கிராம முன்னேற்றப் பணிகள் வருமாறு:

**சாலை வசதி:**

பொதுவாக வனப்பகுதியில் இருக்கும் கிராமங்களுக்குச் சாலை வசதி ஒரு தீராப் பிரச்சனை ஆகும். இதனை நிறைவேற்றுவதன் மூலம் மக்களுக்கு வேண்டிய ஒரு முக்கியமான அடிப்படை வசதி நிறைவேற்றப்படுகிறது. மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையும் பெற முடிகிறது. சமீபத்தில் இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மூன்று சாலை வசதிகள் கிராம மக்களின் பல ஆண்டுகளின் ஏக்கத்தைப் போக்கியுள்ளன என்பதை அம்மக்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். இச்சாலைகள் அனைத்தும் வனத்தின் வழியாகச் செல்பவை. ஊட்டமலை-பிலிகுண்டுலு-நாற்றம்பாளையம் வனச்சாலை இத்திட்டத்தின் மூலம் வாகனப் போக்குவரத்து துவக்கப்பட்டதன் மூலம் சுமார் 1000 வனப்பகுதியில் வாழும் குடும்பங்கள் பெரும் மகிழ்ச்சி வெள்ளத்தில்



திளைக்கின்றனர். இதே போன்று பென்னாகரம் வட்டம், மலையூர் மலைச்சாலை (7 கி.மீ) அம்மக்களின் பங்கேற்புடன் சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும் தருமபுரி வட்டம் கோம்பேரி கிராம மக்கள் தற்போது சீர் செய்யப்படும் சாலை வசதியால், தாங்கள் தற்பொழுது தான் சுதந்திரம் பெற்றதாகக் கூறி மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இச்சாலை வசதியினால், வனப்பாதுகாப்பில் அக்கிராம மக்களுக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டு, திருட்டு மரம் வெட்டுவது அவர்களால் தடுக்கப்பட்டு வருவது இத்திட்டத்திற்குக் கிடைத்த வெற்றிகளில் ஒன்றாகும்.

மேலும் மாவட்ட ஆட்சியர் முயற்சியால், பிக்கிலி, பெரியூர் திட்டக் கிராமங்களுக்கு நடப்பாண்டில் சாலை வசதி செய்து பேருந்து வசதி இணைப்பு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், கோம்பை-மூலக்கோம்பை இணைப்புச் சாலை சுமார் 1.7 கி.மீ. தூரம் சீரமைக்கப்பட்டு மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பாலக்கோடு வட்டம் எரிமலை கிராமத்திற்கு ஒரு பாலமும், எலுமல்மந்தை கிராமத்தை இணைக்கும் ஒரு ஓடு பாலமும் மக்களின் பாராட்டைப் பெற்றவை.

**குடிநீர் வசதி:**

அனைத்துக் கிராமத்திற்கும் குடிநீர் வசதி என்பது மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் கனவாகும். அதை நிறைவேற்றுவதில் வனத்துறையும் தனது பங்கினைச் செய்து வருகிறது. மிகவும் உள்ளே அமைந்துள்ள பல வனக்கிராமங்களுக்குக் குடிநீர் பிரச்சினை தீர்க்கும் விதத்தில் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களுக்கு ஆழ்கிணறு மற்றும் நீர்தேக்கத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தருமபுரி கோட்டம் பரிகம், பெரியூர், பிக்கிலி-கொல்லப்பட்டி, ஒசூர் வட்டம் இராமச்சந்திரம் ஆகியவையாகும்.

**மருத்துவ வசதி:**

வனத்தின் உள்ளே அமைந்திருக்கும் கிராமங்களுக்கு மருத்துவ வசதி ஒரு வரப்பிரசாதமாகும். இதனைக் கருத்தில் கொண்டே, வனத்துறை, பல மருத்துவர்களைக் கொண்ட மருத்துவ முகாம்களைத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தி மக்களின் உடல் நலத்தைப் பேணி வருகிறது. தருமபுரி மாணவர் நற்பணி மன்றம் மூலம் பெரிய அளவிலான மருத்துவ முகாம்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில், பென்னாகரம் வட்டம் வத்தலாபுரம் மற்றும் பிக்கிலி பெரியூர் திட்டக் கிராமங்களில் நடத்தி மக்களின் பாராட்டினைப் பெற்றுள்ளது. சமீபத்தில் தருமபுரி ரோட்டரி சங்க உதவியுடன் தருமபுரி கோட்டம் கோம்பேரி திட்டக் கிராமத்தில் மூன்று டாக்டர்கள் கொண்ட குழுவால் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஆயிரக்கணக்கான கிராம மக்கள் பயன்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மருத்துவ வசதியை இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து வழங்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்:**

கிராம மக்கள் மேம்பாட்டில் கால்நடைகள் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே அவற்றின் முன்னேற்றம் ஒரு முக்கியத் தேவை ஆகிறது. வனத்துறை இத்திட்டத்தில், கால்நடைகளுக்கான தீவன தழை அதிகமாகப் பயிரிடுவதுடன், கால்நடை உடல் நலனைப் பேணிப் பாதுகாக்க இலவச கால்நடை முகாம்களை அவ்வப்போது திட்ட கிராமங்களில், மாவட்டக் கால்நடைத்துறையின் உதவியுடன் நடத்தி வருகிறது. இதுவும் கிராம மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தகைய முகாம்கள், வத்தலாபுரம், கோம்பை, பீக்கிலி, பெரியூர் மற்றும் ஊட்டமலை திட்டக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

**உணவுப் பொருள் வழங்கும் வசதி [ரேசன்]**

பொதுவாக வனக்கிராமங்கள் சரியான போக்குவரத்து வசதி இல்லாமையாலும், போதிய எண்ணிக்கை கொண்ட வீடுகள் இல்லாமையாலும், இக்கிராம மக்கள் பல மைல் தூரம் நடந்து சென்று தங்களுக்குரிய ரேசன் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இது ஒரு முக்கியமான தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இதனைப் போக்கும் விதத்தில் இத்திட்டத்தில், தமிழ்நாடு வனத்துறை, சம்பந்தப்பட்ட துறையினரை அணுகி உணவுப் பொருட்கள் வழங்க வசதியை ஏற்படுத்தி அம்மக்களின் துயரினைப் போக்கியுள்ளது. இத்தகைய வசதி தேன்கனிக்கோட்டை வட்டம் ஜாக்கலைஹட்டி, பாலக்கோடு சரகம் எலுமல்மந்தை மற்றும் எரிமலை திட்டக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக எரிமலை மலைக் கிராமத்திற்கு வனத்துறையினரால் **கழுதைகள் மூலம் ரேசன் உணவுப் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டு** விநியோகிக்கப்படுகின்றன. மேலும் கிருஷ்ணகிரி சரகம், பெம்மரசன்பள்ளி திட்ட கிராமத்தின் மக்கள் நிதிஉதவியுடன் வனத்துறை ஒரு புதிய ரேசன் கடைக்கான கட்டிடம் கட்டித் தந்துள்ளது.

**மாற்று வேலைவாய்ப்புத் திட்டம்:**

பல திட்டக் கிராமங்களில், அநேக மக்கள் விறகு வெட்டிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுக்குத் தகுந்த வருவாய் தரக்கூடிய தொழில் அல்லது வேலை வழங்கினால், இவர்களை மரம் வெட்டுவதிலிருந்து திசை திருப்ப முடியும் என்ற நோக்கத்தில், மாற்று வேலை வாய்ப்புத் திட்டத்தையும் பல கிராமங்களில் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 20க்கும் மேற்பட்ட பலதரப்பட்ட மாற்று வேலை வாய்ப்புத் தொழில்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை அந்த அந்தக் கிராமங்களுக்கு ஏற்றவாறு செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக அனைத்துத் திட்டக் கிராமங்களிலும் பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக தருமபுரி சரகம் அப்பனஹள்ளி கோம்பை திட்டக் கிராமத்தில், வனத்துறைக்கு தேவையான நாற்றுகள் எழுப்பும் பைகளை தைக்கும் பணி, தையல் இயந்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டதன் மூலம், அவர்களின் வருமானத்தைப் பெருக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல் பெண்களுக்குக் கறவை மாடுகள், கயிறு திரிக்கும் இயந்திரங்கள், நெசவு இயந்திரங்கள், சிறு கடை வியாபாரம் செய்ய நிதியுதவி, மக்கள் நாற்றங்கால் எழுப்புதல், செங்கல் தொழில், அரப்புத்தூள் தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், பாய்முடைதல், கூடை முடைதல் மற்றும் கூரைப் புல் சேகரித்தல் போன்ற பல்வேறு சுயவேலை வாய்ப்புத் தொழில்கள் அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, தருமபுரி கோட்டம், போடூர் திட்டக் கிராமத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் நடைபெறும் செங்கல் தயாரித்தல் இலாபகரமாகச் செயல்பட்டு சுமார் 15 பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. அதே

கிராமத்தில் மரம் வெட்டிப் பிழைத்தோருக்கு இலவசக்கருவிகள் வழங்கப்பட்டு, ஒரு இசைக்குழு செயல்பட்டு வருவதை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அவரது சட்டசபைக் கூட்ட உரையில் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும் நடப்பு ஆண்டில், கோம்பேறி திட்டக் கிராமத்தில் மகளிர் பால் கூட்டுறவுச் சங்கம் தொடங்கவும், ஊட்டமலை திட்ட கிராமக் குழுவின் மூலம் ஒகேனக்கல்லில் "டான்டி" (TANTEA) தேயிலை தேனீர் விற்பனை நிலையமும் துவக்கப்பட உள்ளது. ஒசூர் சரகம், பெத்தசிகரலபள்ளி திட்டக் கிராமத்தில், 15 பெண்கள் கொண்ட சுயவேலை வாய்ப்புக் குழு ரூ.10,000 வனத்துறையின் நிதிஉதவியுடன் ஊதுபத்தி தயாரித்து வருகிறது. இதன் இலாபத்தில் மாதந்தோறும் ரூ.1000 திரும்பப் பெறப்பட்டு, மாதா மாதம் மேலும் இரண்டு பெண்களுக்குத் தலா ரூ.500 நிதியுதவி இத்தொழிலுக்கு வழங்கப்படுகிறது. இத்தகைய வருவாய் சேர்க்கும் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருப்பதால், மக்களிடம் வனப்பாதுகாப்பில் ஈடுபாடு அதிகரித்துள்ளது.

**நமக்கு நாமே பணிகள்:**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் 'நமக்கு நாமே' திட்டமும், தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு மக்களின் ஈடுபாட்டுடன் பல வேலைகள் செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக பிக்கிலி திட்ட கிராமத்தில் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள பள்ளிக் கட்டடம் ஒன்று வனத்துறையின் நிதியுதவியுடன் (வனத்துறையின் பங்கு ரூ.75,000-மும், மக்களால் ரூ.1.25 இலட்சமும் சேர்த்து) கட்டப்பட்டுள்ளது. இதேபோல் கோடிஹள்ளி (பென்னாகரம் வட்டம்) திட்ட கிராமத்தில் 85 ஆயிரம் மதிப்புள்ள பள்ளிக் கட்டடம் ரூ.60,000 வனத்துறையின் நிதிஉதவியுடனும், மீதித்தொகை மக்களின் பங்களிப்பிலும் கட்டப்பட்டுள்ளது. ஒசூர் சரகம் சூலகிரி வட்டம் இராமசந்திரம் திட்டக் கிராமத்தில் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள சமுதாயக்கூடம் (வனத்துறையின் உதவி ரூ.75,000-யுடனும் மக்களால் ரூ.2.25 இலட்சமும் வழங்கப்பட்டு) கட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி வட்டம் ஸ்ரீனிவாசபுரம் திட்ட கிராமத்தில் ரூ.40,000 மதிப்பில் குளம் தூர்வாருதல் பணி வனத்துறையினரின் உதவி ரூ.30,000-த்தைப் பெற்று, மக்களால் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பென்னாகரம் வட்டம் மலையூர் திட்டக் கிராம மக்கள் தங்கள் ஊருக்கு வேண்டிய ரூ.3 இலட்சம் மதிப்புள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளை வனத்துறையினரின் உதவி ரூ.50,000 உடன் மேற்கொண்டு சிறப்பாகச் செய்துவருகின்றனர். தருமபுரி சரகம் கோம்பேறி திட்டக் கிராமத்திலும், கிராம மக்களின் உழைப்புடனும், வனத்துறையில் நிதியுதவியுடனும் சாலை மேம்பாட்டுப் பணி நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி சரகம் துடுக்கனஹள்ளி திட்ட கிராமத்தில், சாலை மேம்பாட்டுப் பணி, சமுதாயக் கூடம், குளம் வெட்டுதல் பணிகள் சுமார் 2 இலட்சம் செலவில் வனத்துறையால் மக்களின் நிதியான ரூ.70,000 மூலம் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், பொம்மரசம் பள்ளி திட்டக் கிராமத்தில் புதிய ரேசன் கடை கட்டடம் ஒன்று மக்களின் நிதியுதவி ரூ.25,000-யுடன் வனத்துறையினரால் கட்டப்பட்டுள்ளது. இதேபோல் ஏராளமான சிறிய, பெரிய பணிகள் மக்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் "நமக்கு நாமே" கோட்பாட்டுடன் செயல்படுத்தப்பட்டிருப்பது பெருமைக்குரிய செயலாகும்.

**திட்டங்களும் எதிர்பார்ப்புகளும்:**

தருமபுரி மாவட்டத்தில், இந்தச் சிறப்புத் திட்டமான "தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம்" ஒரு புதிய நோக்குடன் புரட்சிகரமாகச் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டொண்டிற்கு இம்மாவட்டத்தில் 20 கிராமங்கள் வீதம் ஐந்து ஆண்டுகளில் சுமார் 100 கிராமங்களைத் தத்தெடுத்து ஒரு கிராமத்திற்கு ரூ.30 இலட்சம் வீதம் செலவு செய்யப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் திட்ட முடிவில் சுமார் 10,000 ஹெக்டேர் தரம் குன்றிய காடுகளை மேம்படுத்த முடியும்.

இக்காடுகள் அனைத்திலும் கிடைக்கும் வருவாய், அக்கிராம மக்களையே சென்றடைவதால் மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும். இத்திட்டத்தின்கீழ் துவங்கப்பட்ட மாற்று வேலைவாய்ப்புத் திட்டங்களும் சம்பந்தப்பட்ட ஏழை மக்களின் வருவாயை அதிகரிக்கும் என்பது நிச்சயம். சமீபத்தில் பல துறைகளின் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுக்கள், மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் தலைமைச் செயலர் செயல்பாடுகளை ஆய்வு செய்யவுள்ளது. இதன் மூலம் பலவேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகளையும் இத்திட்டக் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான அனைத்து வசதி வாய்ப்புக்களைப் பெற்று முன்னேற வழிவகை செய்யப் பட்டுள்ளது. வனம் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் பொழுது, பக்கத்தே உள்ள வனத்தின் தரமும் உயரும், வனத்தைப் பாதுகாப்பதில், மக்களிடம் விழிப்புணர்வும், ஈடுபாடும் அதிகரித்து வருவதை அனைத்துத் திட்டக் கிராமங்களிலும் கண்கூடாகக் காண்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் பல திட்டக் கிராம மக்களின் கனவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை அறியும்பொழுது, வனத்துறைப் பணியின் தரம் மேலும் ஒருபடி உயர்ந்துள்ளது என்பது மிகையாகாது. வருங்காலத்திலும், மக்களுக்குச் சேவை செய்ய வனத்துறைக்கு இத்திட்டத்தின் மூலம் அரசு வழங்கிய இந்த வாய்ப்பு நல்ல முறையில் பயன்படுத்தப்படும் என்பதோடு, மலைப்பகுதிகளை ஒட்டியுள்ள ஏழை, எளிய மக்களுக்கும் வனத்துறை அலுவலர்களுக்கும் இடையே இதுவரை இருந்துவந்த முரண்பாடுகள் அடியோடு களையப்படுகின்றன; இரு சாராரும் தோளோடு தோள் நின்று வனவளத்தைக் காப்பதிலும், அதே நேரத்தில் அப்பகுதி மக்களின் வறுமையகற்றப்பட்டு பொருளாதார வளம் மேலோங்கிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது உறுதியே!

***"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
வளமான வனமென்று
சங்கே முழங்கு..."***

- என்ற கீதம் கிராம மக்களிடையே எப்பொழுதும் ஒலிக்க 'நமக்கு நாமே' என்ற புதிய முழக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க ஒத்துழைப்போம், உயர்வு காண்போம் என உறுதிமேற்கொள்வோம். ❐

8 - ஆம் பக்கத் தொடர்ச்சி

செயல்படுத்தி வருகிறார் என்பதை நாடறியும். அந்த அருளாளர் ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டம் பெற்றுள்ள பேறு பெருமைக்குரியதாகும். இம்மாவட்டத்தில் 1991ஆம் ஆண்டு வரையிலே பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 39 விடுதிகளே மாணவ, மாணவிகளுக்காகச் செயல்பட்டு வந்தன. அதற்குப்பிந்திய ஆட்சிக் காலத்தில் ஏழெட்டு விடுதிகளே உருவாயின!

மாண்புமிகு **கலைஞர்** அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுகளிலேயே 17 விடுதிகள் - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பிலே புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன.

### ஆதிதிராவிடர் நலத்துறை

சுதந்திரத்திருநாள் பொன்விழா கொண்டாடவிருக்கும் இந்நேரத்தில் எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக உள்ளது. ஆனால் ஆதிதிராவிடப் பெருமக்கள் இதந்தரும் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துச் சுகம் காணப் பாடுபட்டு வருகிறது **கலைஞர்** அரசுதான் என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!

குறிப்பாகச் சொல்லுவதானால் 1991 ஆம் ஆண்டு வரையிலே தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 33 மாணவ, மாணவியர் விடுதிகளே இயங்கிவந்தன. கடந்த ஆட்சிக் காலத்திலோ, அதாவது ஐந்தாண்டுகளில் அவர்கள் 4 விடுதிகள் மட்டுமே கட்டினர்.

**கலைஞர்** அரசு அமைந்த இந்த இரண்டாண்டு காலத்திலேயே ஏழை, எளியோருக்கும் கல்விக்கண் திறந்து வைத்து ஆதிதிராவிட மாணவ, மாணவியர் தம் இல்லங்களிலும் ஒளி விளக்கேற்றும் வகையிலே 8 விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. அன்றைய ஆட்சியில், ஐந்தாண்டுகளில் 25,739 ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு மட்டுமே அவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருந்தனர். இன்று நம் **கலைஞர்** ஆட்சி இந்த இரண்டாண்டுகளிலேயே 10,296 ஆதிதிராவிடச் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி மாவட்ட மண்வளம்

1965 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாளன்று சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட மக்களின் முக்கியத் தொழிலாக விளங்குவது வேளாண்மை.

இம்மாவட்டத்தில் 43 சதவிகிதப் பரப்பில் பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

14 வித மண் வகைகள் கொண்ட தருமபுரி மாவட்ட ஆண்டு சராசரி மழையளவு 850 மி.மீ. ஆகும். மாநில மழை அளவில் இது 10 சதவிகிதம் மட்டுமே குறைவு.

இம்மாவட்டத்தில் மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1991-92 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.27.961 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.27.663 இலட்சம் செலவிடப் பட்டிருக்கிறது.



### நிதி நிருவாகம்

சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பதில் இந்த மாவட்டம் இணையற்றுத் திகழ்கிறது; காவல் துறைக்கெனப் புதிய கட்டடங்கள் சில உருவாக்கப்பட்டுள்ளன.

'மனுநீதிச் சோழன்' என மங்காத புகழ்பெற்ற **கலைஞர்** அரசில் - தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் இருந்த தற்காலிக நீதிமன்றம், 'முன்சீஃப் கோர்ட்' ஆக நிலை உயர்த்தப் பட்டிருக்கிறது.

தருமபுரியிலே ஒரு நீதிமன்றக் கட்டடமும், ஊத்தங்கரையிலே ஒரு நீதிமன்றக் கட்டடமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

### நீர்வள ஆதார அமைப்பு

இம்மாவட்டத்தில், பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ், ரூ.36.03 இலட்சம்





மதிப்பீட்டில் செயலாக்கம் பெற்று, விவசாயத்தில் ஈடுபாடுகொண்டோர் பெரும் பயன் பெறும் வகையில் 18 பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், பாசன நீர் நிலைகள் சீரமைத்தல் திட்டத்தில் 25 பணிகள் ரூ.10.10 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதன்மூலம், பெரும் அளவு பாசனப் பரப்புகள் பயன்பெற்று வருகின்றன.

## தருமபுரி மாம்பழம்

"சேலத்து மாம்பழம்" என்று பெயராகிவிட்டது என்றாலும் - அப்பெயரைத் தாரை வார்த்துக் கொடுத்ததே தருமபுரிதான்! ஆம், வகை வகையான மாம்பழங்கள் விளைச்சல் தருமபுரி மாவட்டத்தில்தான் அதிகம்!

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் பரம்பரையைச் சேர்ந்த சில குடும்பத்தார், தருமபுரியில் உள்ள சிந்தூரில் வந்து குடிபுகுந்துள்ளனர். அன்று முதல் இன்று வரை, அவர்கள் இங்கே செய்து வரும் தொழில் ஒட்டுமாஞ் செடிகள் பயிரிடுவதேயாகும்!

அப்படி அவர்கள் உருவாக்கும் ஒட்டு மாஞ்செடிக்குத் தமிழகமெங்கும் நல்ல கிராக்கியிருக்கிறது. சந்தூர் ஒட்டுமா என்றே அதற்குப் பெயர்.

## அனைவருக்கும் கல்வி

இரண்டாயிரமாவது ஆண்டிற்குள் கல்விக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்கிற முதல்வர் **கலைஞர்** அவர்களின் உயரிய திட்டத்தை நிறைவேற்றிடும் வகையில் - தருமபுரி மாவட்டக் கல்விப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் இம்மாவட்டத்தில் 10 தொடக்கப்பள்ளிகளும், 5 நடுநிலைப்பள்ளிகளும் மட்டுமே திறக்கப் பட்டிருந்தது. ஆனால் இந்த மூன்றாண்டுகளில் **கலைஞர்** அரசில் 105 தொடக்கப்பள்ளிகளும், 18 நடுநிலைப் பள்ளிகளும், 20 உயர்நிலைப் பள்ளிகளும், 15 மேல்நிலைப் பள்ளிகளும், புதியதாகத் தொடங்கப்பட்டுச் சாதனை படைக்கப் பட்டிருக்கிறது.

முந்திய அரசில், அதாவது ஐந்தாண்டுகளில் 168 இடைநிலை ஆசிரியர்கள் மட்டுமே புதிதாகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால் இந்த மூன்றாண்டுகளில் 1,734 இடைநிலை ஆசிரியர்கள், 48 உடற்கல்வி ஆசிரியர்கள், 29 ஓவிய ஆசிரியர்கள் புதிதாகப் பணி நியமனம் செய்யப் பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மாவட்டத்

தொடக்கக் கல்வித்திட்டத்தின் மூலம் 1,473 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கி நிரப்பப்பட்டுள்ளன. குறிப்பாக, மொரப்பூர் தொகுதியிலுள்ள, தகுதி பெற்ற அனைத்துக் கிராமங்களிலும், தொடக்கப் பள்ளிகள் 100 சதவிகிதம் என்கிற அளவிற்கு குறியீடு எய்தப்பட்டுள்ளது.

**மலைவாழ் மக்கள் மேம்பாடு**

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, இம்மாவட்டத்தில் உள்ள மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கிடும் வகையில் பல்வேறு நற்பணிகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

குறிப்பாக, குடிநீருக்காக ரூ.25.62 இலட்சம், தெருவிளக்கு வசதிக்கென ரூ.16.56 இலட்சம், சாலை வசதிக்காக ரூ.98.30 இலட்சம், ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ.12.50 இலட்சம், மருத்துவ வசதிக்கு ரூ.19 இலட்சம், சத்துணவுக்கென ரூ.7.70 இலட்சம், குடிமைப்பொருள் அங்காடி வசதிக்கென ரூ.2.80 இலட்சம் - ஆக மொத்தம் 182.42 இலட்சம் செலவிடுவதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் -

***நினைந்து நினைந்து,***

***உணர்ந்து உணர்ந்து,***

***நெகிழ்ந்து நெகிழ்ந்து,***

***அன்பே நிறைந்து நிறைந்து,***

***ஊற்றெழும் கண்ணீரதனால்***

***உடம்பு நனைந்து நனைந்து,***

எல்லாத்தரப்பு மக்களும் போற்றிப் புகழ்ந்து பாராட்டுமளவிற்கு அரசின் சாதனைப் பட்டியல் தொடர்ந்து கொண்டே போகிறது.



***அதில், தருமபுரி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள - நிறைவேற்றப் பட்டு வருகிற நலப்பணித் திட்டங்களின் ஒரே ஒரு துளிதான் இது.***

**கலைஞர்,** தம் சாதனையால் வளர்ச்சிப் பணிகளிலே 25 ஆம் இடத்திலிருந்த பின் தங்கிய மாவட்டமான தருமபுரி, இப்போது அவ்வகையில் முதல் மூன்றாம் இடத்தினைப் பெற்றிருக்கிறது என்கிற ஒன்றே, தமிழ்நாடு அரசின் தன்னிகரற்ற ஆக்கப்பணிகளாம் மணிமகுடத்தில் மேலும் ஒரு மாணிக்கக் கல்லாகச் சுடர் விடுகிறது அல்லவா!

★ ★ ★

**தருமபுரி மாவட்டம்**

***பிற சாதனைகள்***

- ★ 1989ல் முதன்முதலாகச் சித்தேரி மலைப்பகுதி கிராமத்திற்கு நகர்ப் பேருந்து இயக்கப்படுகிறது.
- ★ ரூ.2 கோடியில், மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்.
- ★ மாவட்டக் கிளை நூலகங்கள் 41 திறக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டில் 32 அமைப்பு.
- ★ தருமபுரியில் முதன் முதலாக கூட்டுறவுப் பயிற்சி நிலையம்.
- ★ மாவட்ட மாணவ மாணவிகள் பயனுக்கெனத் தருமபுரியிலேயே தொழிற்கல்வி நுழைவுத்தேர்வு.
- ★ பர்கூர், பாப்பிரெட்டிப்பட்டியில் தாலுகா அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள்.
- ★ 5 ஊரகப்பகுதிகளில் புதிதாக மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள்.
- ★ ஒசூர், அரூர் நகரக் கூட்டுறவு வங்கிகள் புதிதாக உருவாக்கம்.

# "இந்தியாவிலேயே தமிழகத்து மாணவர்கள் மிகச்சிறந்தவர்கள் என்ற நிலைக்கு இந்த அரசு உயர்த்தும்!"

## - முதலமைச்சர் கலைஞர்



### 235 மாணவ, மாணவியர்கட்குப் பாராட்டும் - சான்றிதழ்களும்

"சிறந்த மதிப்பெண் பெறுகின்ற மாணவர்களுடைய உயர்கல்விச் செலவை அரசாங்கமே ஏற்கும் ஒரு திட்டத்தை இந்த ஆட்சி கொண்டுவந்து, அதை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிலையிலேதான், இன்றைக்கு 235 மாணவ-மாணவியர்களுக்குப் பாராட்டும், சான்றிதழ்களும் வழங்குகின்ற விழாவான இதிலே எனக்கொரு மகிழ்ச்சி. பிளஸ்-2 மாணவர்கள் என்று பார்த்தால், நாற்பதுக்கு மேற்பட்ட மாணவிகள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல நாற்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### கல்வி அறிவு பெறுவதில் ஆண்களோடு பெண்களும் போட்டி

ஆண்களுக்குச் சமமாக இன்றைக்குப் பெண்களும் கல்வி அறிவு பெறுகின்ற அந்தத் துடிப்போடு தமிழகத்திலே முன்வருகிறார்கள்; அதிலும் போட்டி போட்டுக்கொண்டு பரிசு பெறுகிறார்கள். முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என்கிற இடங்களை எப்படியும் நாம் பிடித்தாக வேண்டுமென்ற முனைப்போடு கல்வியைக் கற்கின்றார்கள் என்பது இந்த அரசினுடைய எண்ணத்திற்கு மேலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை நான் இங்கே தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தின்படி 1996-97ஆம் ஆண்டு முதல், தமிழை முதன்மைப் பாடமாகக் கொண்டு, 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவிலும், 97-98ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களின் உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும். இந்தத் திட்டத்தைத்தான் இன்றைக்கு நாம் இங்கே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

### மேல் படிப்பிற்கான செலவை அரசே ஏற்பதற்கான விழா

இதன்படி பத்தாம் வகுப்புத் தேர்விலே மாவட்டந்தோறும் முதல் மூன்று இடங்கள் பெறும்

மாணவ-மாணவியரின் மேல்நிலைக் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்கின்றது.

அவ்வாறே 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்டந்தோறும் மூன்று இடங்கள் பெறும் மாணவ-மாணவியர் படிக்க விரும்பும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் பட்டப் படிப்புகள் உட்பட, அவர்கள் எந்தப் படிப்பைப் படித்தாலும் அதற்குரிய செலவு முழுவதையும் இந்த அரசே ஏற்றுக்கொள்கின்றது. அதுதான் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த விழா.

**இவ்வாண்டு சாதனை படைத்த 235 மாணவ-மாணவியர்**

இந்தத் திட்டத்தின்படி இந்த ஆண்டில் 12ஆம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் சாதனைகள் படைத்துள்ள 96 மாணவர்களுக்கு அவர்களின் கல்லூரி பட்டப் படிப்புகளுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதேபோல, பத்தாம் வகுப்புத் தேர்வில் இந்த ஆண்டில் சாதனைகள் படைத்துள்ள 139 மாணவர்களுக்கு, அவர்களுடைய மேல்நிலைக் கல்விக்கான செலவு முழுவதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இப்படி 10, 12ஆம் வகுப்புகளில் இந்த ஆண்டில் சாதனைகள் படைத்துள்ள மொத்த மாணவர்கள் 235 பேர் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சி மேலிடுகின்றது.

இஃதன்னியில், இன்னொரு செய்தியையும் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்; ஏற்கெனவே ஏடுகளில் வெளியிடப்பட்ட ஒரு செய்திதான்.

**கேரள மாணவருக்கு ரூ.1 இலட்சம் கல்வி நிதி**

திருவனந்தபுரம், விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்தில், பொறியாளராகப் பணியாற்றிவரும் கோவிந்தராமன் என்பவரின் செல்வன் கிருஷ்ணராம், சென்னை ஐ.ஐ.டி.யில் முதலாண்டு பி.டெக் வகுப்பிலே பயின்றுவருகிறார். அந்த மாணவர் பிற்படுத்தப்பட்ட சௌராஷ்டிரா சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாய்மொழி தமிழ் அல்ல. இந்த மாணவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்ற போதிலும், இவருடைய தந்தையார் கேரளாவிலே பணியாற்றிய காரணத்தால், அங்கேயுள்ள பள்ளியிலே முதல் வகுப்பிலேயிருந்து கல்லூரி புகுமுக வகுப்புவரை தமிழை முதல் மொழியாகக் கொண்டு படித்து, நல்ல மதிப்பெண்களைப் பெற்றதோடு ஏராளமான பரிசுகளையும் பெற்றிருக்கிறார். அவருடைய குடும்பத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாமையால், அந்த மாணவரின் ஐ.ஐ.டி. பி.டெக் படிப்பிற்கான செலவினைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கையை இந்த அரசு பரிவோடு ஏற்றுக்கொண்டு மாணவர் செல்வன் கிருஷ்ணராம் படிப்புச் செலவிற்காக ஒரு சிறப்பு நேர்வாகக் கொண்டு ஒரு இலட்சம் ரூபாய் கல்வி நிதியை இந்த அரசு - அவருக்கு இந்த விழாவிலே வழங்குகின்றது.

மாணவர்களுடைய ஆர்வத்தை மேலும் தூண்டுவதற்காக அவர்களை, இந்தியாவிலேயே - தமிழகத்து மாணவர்கள் மிகச் சிறந்தவர்கள், என்ற நிலைக்கு உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளிலே ஒரு சிலவற்றைத்தான் நானும் பேராசிரியர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**நாணிட வேண்டும்; நாண் - இடவேண்டும்!**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் - "ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால், அதற்கு இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" - என்று சொன்னார். ஏழ்மையின் காரணத்தால் ஒரு தமிழனுக்குப் படிப்பில்லை என்று சொன்னால் இங்குள்ள எல்லோரும் அதற்காக நாணிட வேண்டும் என்று சொன்னார். அதாவது வெட்கப்பட வேண்டுமென்று சொன்னார்.

***10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில - மாவட்ட அளவில் மூன்று இடங்களைப் பெற்ற 235 மாணவ - மாணவிகளுக்கு மேல்படிப்புச் செலவை அரசு ஏற்கும் விழா 27-7-98 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.***

***235 மாணவ - மாணவிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும், பிற்பட்ட சௌராஷ்டிர சமுதாயத்தைச் சேர்ந்தவரும், கேரளாவில் முதல் வகுப்பிலேயிருந்து கல்லூரி புதுமுக வகுப்பு வரை தமிழை முதல் மொழியாகக் கொண்டு படித்து இப்போது ஐ.ஐ.டி.யில் முதலாண்டு பி.டெக் படிப்பவருமான மாணவர் கிருஷ்ணராம் படிப்புச் செலவிற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியினை விழாவில் வழங்கினார்.***

***மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.***

அதற்கு நான் இந்த அரசின் சார்பாக வேறு பொருள் கொள்கிறேன். என்ன பொருள் என்றால், நாண் என்றால் வில்லிலே இருக்கின்ற நாண்; அந்த நாண் இருந்தால்தான் அம்பு பாயும். நாணிடப்பட்டால்தான் அம்பை எய்திட முடியும். மாணவர்களுடைய "கல்வி முன்னேற்றம்" என்கின்ற அம்பை எய்வதற்கு நாணிட (நாண் இட) வேண்டுமென்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறியதாகக் கருதி அந்த நாணிடுகின்ற பணியைத்தான் கழக அரசு செய்துகொண்டிருக்கின்றது.

### பாடமாக அமர்ந்திருக்கும் மாணவச் செல்வங்கள்

மாணவர்களுக்கு இவ்வளவு ஆர்வத்தை ஊட்டுகின்ற நிலையில் உதவிகளை, பரிசுகளை, பட்டயங்களை, அவர்களுடைய படிப்புச் செலவை ஏற்கின்ற இந்த நிலைமைகளையெல்லாம் நாம் ஏற்படுத்திக் கொடுத்தாலுங்கூட, எல்லா மாணவர்களும் உற்சாகத்தோடு, தங்களுடைய பெற்றோர் எதற்காகத் தங்களைக் கல்வி நிலையங்களுக்கு அனுப்பினார்கள் என்கின்ற அந்த அக்கறையோடு அல்லது ஆசிரியர்கள் ஏன் நமக்கு இவ்வளவு சிரமத்தோடு பயிற்சி தருகிறார்கள் என்கின்ற அந்த நிலையை எண்ணிப்பார்த்து எல்லா மாணவர்களும் இருக்கிறார்களா என்றால் - நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இல்லை; அவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாகத்தான் இங்கே அமர்ந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள் என்று நான் பெருமிதம் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் புராணத்திலே படித்திருக்கிறோம். ஆசிரியர் சொல்லிக் கொடுக்க விரும்பாவிட்டாலுங்கூட, ஒரு மாணவன், ஏகலைவன், தானாகவே வில் வித்தை கற்றுக்கொண்டு, தன்னுடைய ஆசிரியரிடத்திலே சென்று - ''வில் வித்தை கற்றுக் கொண்டேன்'' - என்று சொன்ன போது, "ஆசிரியர் அனுமதியில்லாமலேயே நீயாக என்னை நினைத்து வில்வித்தை கற்றுக் கொண்டாய், அதற்கு உன்னுடைய கட்டை விரலை காணிக்கையாகக் கொடு'' - என்று சொன்னதும், ஏகலைவன் தன் கட்டை விரலையே காணிக்கையாகக் கொடுத்தான் என்கிறது புராணம்.

ஆனால், இன்றைக்கு எந்த ஏகலைவனாவது தன்னுடைய கட்டை விரலைத் தரத் தயாராக இருக்கிறானா? என்று கேட்டால், கூடுமானவரையிலே ஆசிரியர்களுடைய கட்டை விரலைக் காணிக்கையாகப் பெறுகின்ற ஏகலைவர்கள் சிலபேர் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

### சென்னை மாநகரில் நடந்த அதிர்ச்சியடையச் செய்த நிகழ்ச்சி

இங்கே கல்வி அமைச்சரும், மற்ற அமைச்சர்களும், நானும் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறோம். குறிப்பாகப் பெண்கல்விக்குத் தமிழகத்திலே சிறப்பான இடம் தரப்படவேண்டுமென்று. ஆனால், அந்தக் கல்வி பயிலச் செல்கின்ற பெண்களுக்கு எப்படி சிறப்பான இடம் வேண்டுமென்று கருதுகிறோமோ அதைப் போலவே தகுந்த உரிய பாதுகாப்பும் அவர்களுக்கு வேண்டுமென்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன் சென்னை மாநகரிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி எந்த அளவிற்கு என்னை அதிர்ச்சியடையச் செய்தது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

கல்வி பயிலச் செல்கின்ற பெண்களைக் கல்வி பயிலுகின்ற மாணவர்களே ''ஈவ்-டீசிங்'' என்கின்ற பெயரால், எந்த அளவிற்குக் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள் - ஒரு இளம் தளிரின் சாவுக்கு அவர்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது 80,000 போலீசாரைக் கொண்ட தமிழகக் காவல்துறையால் மாத்திரம் இவை அனைத்தையும் உடனுக்குடன் கவனித்துச் சரி செய்வதென்பது இயலாத காரியம். ஆறு கோடி மக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறோம். அதிலே சுமார் ஒரு கோடிப் பேர் மாணவர்கள் இன்றைக்குப் பயின்றுகொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு போலீஸ்காரரை நியமித்து அவர்களைக் காப்பாற்றுவது, பாதுகாப்பது என்பது முடியாத காரியம். எனவே, நாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுமக்களும் இப்படிப்பட்ட காரியம் நடைபெறுகின்றபோது அதைத் தடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

### 'ராகிங்' தடை செய்யக் கொண்டுவரப்பட்ட சட்டம்

சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு தடுக்கத் தேவையில்லை; அவர்களைத் தடுத்து அவர்களைப் பிடித்துக் காவல்துறையிடம் ஒப்படைக்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்றுபவர்களாகப் பொதுமக்களும் இருக்கவேண்டும். ஏற்கெனவே ஒரு சோகச் சம்பவம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்றது; நாவரசின் நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகிறேன். அதற்காக இந்த அரசு "ராகிங்" தடை செய்யப்பட ஒரு சட்டமே கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கின்றது. அதற்குப் பிறகு பெருமளவிற்கு அது குறைந்திருக்கின்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இன்று கூட சென்னை மாநகராட்சி மன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அரசைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள், இந்த ''ஈவ்-டீசிங்''கைத் தடுப்பதற்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

### மக்கள் விருப்பப்படி விரைவில் சட்டம்

அவர்கள் மாத்திரமல்ல; தமிழக மக்கள் அனைவருமே அப்படி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த அரசு அந்தச் சட்டத்தை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. விரைவிலே அந்தச் சட்டம் வரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்த இனிய நிகழ்ச்சியிலே பரிசு பெறுகின்ற, பாராட்டுப் பெறுகின்ற, அரசின் உதவியைப் பெறுகின்ற எல்லா இளம் தளிர்களுக்கும் என்னுடைய அன்பான இனிய வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

# அரசு ஆணைகள்

## 500 கி.மீ. நீளமுள்ள 4 மாவட்ட நெடுஞ்சாலைகளை மேம்படுத்திட முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள மதுரை-தூத்துக்குடி நெடுஞ்சாலையில் 131.6 கி.மீ. நீளச்சாலையும், கோவை - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் 158.2 கி.மீ. நீளச் சாலையும், தொப்பூர் - மேட்டூர் பவானி சாலையில் 80.6 கி.மீ. நீளச் சாலையும், பாளையங்கோட்டை - திருச்செந்தூர் நெடுஞ்சாலை மற்றும் திருநெல்வேலி - செங்கோட்டை நெடுஞ்சாலையில் 131.கி.மீ. நீளச்சாலைகளும், ஆக நான்கு பெரிய மாவட்ட நெடுஞ்சாலைகளில் ஏறத்தாழ 500 கி.மீ. நீளமுள்ள சாலைகளை தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தி உலகத் தரத்திற்கு இணையாக மேம்பாடு செய்திட ஐ.எல்.எப்.எஸ் என்ற தனியார் ஆலோசனை நிறுவனத்துடன், தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறை, முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில் 20.7.98 அன்று காலை 10.30 மணிக்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு கையெழுத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஐ.எல்.எப்.எஸ், நிறுவனம் சாலைகள் அமைத்தல் - இயக்குதல் - ஒப்படைத்தல் (Build Operate and Transfer) திட்டத்தின்கீழ் மேலே குறிப்பிட்டுள்ள 4 சாலைகளையும் மேம்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து, திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதுடன், திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தகுதி வாய்ந்த வல்லுநர்களைத் தேர்வுசெய்தல், வேலை ஒப்பந்தங்களைத் தயாரித்தல், ஆகியவற்றை நிறைவேற்றி முடித்தல், பின் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளில் நெடுஞ்சாலைத்துறைக்கு உதவிபுரியும்.

## முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளக்கோயில் மற்றும் காங்கேயம் ஒன்றியங்களிலுள்ள 127 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில், ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோயில் ஒன்றியத்தைச் சார்ந்த 10 குடியிருப்புகள் மற்றும் காங்கேயம் ஒன்றியத்தைச் சார்ந்த 117 குடியிருப்புகளுக்கு ரூ.3.64 கோடி மதிப்பீட்டில், 30,000 மக்கள் தொகைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் வள்ளிபனங்காட்டில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத் தொட்டியிலிருந்து காவிரி ஆற்று நீர் மின் இறைப்பான் மூலம் இறைக்கப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 23.07 கி.மீ. நீளத்திற்கு நீருந்து குழாய்கள், 14 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் 121 கி.மீ. நீளத்திற்குப் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.3.64 கோடி மற்றும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.6 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் தனி நபர் திட்டச்செலவு ரூ.1,273/- மற்றும் 1,000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.28.88 ஆகும். இத்திட்டத்தில் பயனுறும் குடியிருப்புகள் அனைத்தும் ஊரகக் குடியிருப்புகள் ஆதலால், இத்திட்டம் அரசின் முழுமானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

## சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு, ரூ.24.84 கோடி மதிப்பில் குடிநீர் திட்டம்.

சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு ரூ.24.84 கோடி மதிப்பிலான குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு தற்போது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் பிரதான நீரேற்றுக் குழாய்களிலிருந்து 447 கி.மீ. நீளம் கொண்ட பகிர்மானக் குழாய்கள் மூலமும், 131 இலட்சம் லிட்டர் மொத்தக் கொள்ளளவு கொண்ட 11 மேல்நிலைத் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்படும்.

மேலும் 850 பொதுக்குழாய்கள் அமைக்கப்படவுள்ளன. ஆதிதிராவிட குடியிருப்பில் அமைக்கப்பட உள்ள 170 பொதுக்குழாய்களும் இதில் அடங்கும். கன்னன்குறிச்சி டி.பி., ஜாகீர்அம்மாப்பாளையம், ஜாகீர்ரெட்டிபட்டி, ஜாகீர் காமநாயக்கன்பட்டி, ரெட்டியூர், அழகாபுரம், சின்னகோலப்பட்டி, அழகாபுரம்புதூர், பெரியகோவில்பட்டி, குமாரசாமிபட்டி, சொர்ணாபுரி, பேர்லேண்ட்ஸ், அன்னதானபட்டி, வடக்குஅம்மாபேட்டை, தெற்கு அம்மாபேட்டை, தடம்பட்டி, மெய்யனூர், ஜெரிகொண்டலம்பட்டி, சீலநாயக்கன்பட்டி, சிவதாபுரம், பள்ளிபட்டி, கண்டம்பட்டி மற்றும் ஆரியகவுண்டன்பட்டி ஆகிய 24 குடியிருப்புப் பகுதிகளில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் வழங்கும் நிதி உதவியுடன் சேலம் மாநகராட்சி இத்திட்டத்தைச் செயல்படுத்தும்.

## திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கு ரூ.12 கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டம்

புள்ளம்பாடி ஒன்றியத்தைச் சார்ந்த 33 ஊரகக் குடியிருப்புகள், இலாங்குடி ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊரகக் குடியிருப்புகள், ஆலத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 3 ஊரகக் குடியிருப்புகள் திருமானூர் ஒன்றியத்தைச் சார்ந்த 2 ஊரகக் குடியிருப்புகள் பயனுறும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3 தரைமட்டத் தொட்டிகள், 85 கி.மீ. நீளத்திற்கு நீருந்து குழாய்கள், 26 மேல்நிலைத் தொட்டிகள் (மொத்தக் கொள்ளளவு 12.4 இலட்சம் லிட்டர்கள்) மற்றும் 35 கி.மீ. நீளத்திற்கு நீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.12.05 கோடியாகும். வருட பராமரிப்புச் செலவு ரூ.24.50 இலட்சங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஊரகப் பகுதிகளில் ரூ.14 கோடி மதிப்பில் 500 பள்ளிக் கட்டடங்கள்

1998-99ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 500 பள்ளிக் கட்டடங்கள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு பள்ளிக் கட்டடமும் ரூ.4 இலட்சம் மதிப்பில் கட்டப்படும். இதற்கான பணிகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 1998-99ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்புகளைத் தடுக்க உடனடி நடவடிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளம் துறை, பெரியவிளை, மண்டைக்காடு புதூர், மார்த்தாண்டம் துறை, வள்ள விளை, தூத்தூர், பூத்துறை, இறையுமன்துறை, இணையம், மிடாலம் ஆகிய 10 கடலோரக் கிராமங்கள் கடலரிப்புக் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களில் 160 வீடுகள் சேதமடைந்துள்ளன. இச்சேதங்கள் குறித்தும், சேதாரத்தின் அபாயம் குறித்தும் கவலையுடன் சிந்தித்து, அந்த மாவட்டத்தில் ஏற்படும் கடலரிப்பைத் தடுப்பதற்காக முதல் கட்ட உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 1 கோடி ரூபாய் அனுமதித்து, பணிகளை மிக விரைவில் தொடங்க ஆணையிட்டுள்ளார்.

## கோயம்புத்தூரில் வழக்கறிஞர்களுக்கான அறைகள் கட்ட 1.65 கோடி ரூபாய் அனுமதி

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிப் பகுதிகள் அனைத்திலும் வழக்கறிஞர்களுக்கான அறைகள் (Law Chambers) ஏற்படுத்தப்படும் என்றும், அதன் முதற்கட்டமாகக் கோவை, மதுரை ஆகிய இடங்களில் வழக்கறிஞர் அறைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தமிழகச் சட்டப்பேரவையில் அரசின் சார்பில் கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பின்படி, மதுரையில் வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டுவதற்காக 31.7.97 அன்று 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது கோயம்புத்தூரில் வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டுவதற்காக 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் அனுமதித்து 14.7.98 அன்று முதலமைச்சர் **கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

## நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள 1154 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 9 பேரூராட்சிகளுக்கு ரூ.61.41 கோடியில் குடிநீர்த் திட்டம்

நாமக்கல் மாவட்டம் பட்டணம், சீராப்பள்ளி, ஆர்.புதுப்பட்டி ஊரகப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கவும், 3 பிற ஊரகப் பேரூராட்சிகள், 858 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள 6 ஊரகப் பேரூராட்சிகள், 296 வழியோரக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க ரூ.61.41 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு 13.7.98 அன்று அனுமதி வழங்கியுள்ளது. கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒடுவத்தூர் அருகே காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மக்கள் தொகை 7.26 இலட்சமாகும். இத்திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 83.00 மில்லியன் தண்ணீர் காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 63.00 கி.மீ. நீளமுள்ள நீருந்துக் குழாய்கள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பட்டணம், சீராப்பள்ளி மற்றும் ஆர்.புதுப்பட்டி ஊரகப் பேரூராட்சிகளுக்கு 6 மேல்நிலைத் தொட்டிகளும் 27 கி.மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்களும் அமைக்கப்பட உள்ள இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.61.41 கோடியும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.5.40 கோடியும் ஆகும். இத்திட்டத்தின் தனிநபர் திட்டச்செலவு ரூ.663/- மற்றும் 1000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.5.53 ஆகும். இத்திட்டத்தில் பயனுறும் குடியிருப்புகள் அனைத்தும் ஊரகக் குடியிருப்புகளாதலால், இத்திட்டம் தமிழ்நாடு அரசின் முழு மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

## ரூ.1.05 கோடி செலவில் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் உயர்த்தப்படுகிறது

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாத ஓய்வூதியம் 175 ரூபாய் என்றும், குடும்ப ஓய்வூதியம் 100 ரூபாய் என்றும் 23.8.96 அன்று முதல்முறையாக இந்த அரசினால் நிர்ணயிக்கப்பட்டு, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் உயர்த்தி வழங்குமாறு முன்னாள் கிராம அலுவலர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கையினை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து, முன்னாள் கிராம அலுவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் மாத ஓய்வூதியம் 175 ரூபாய் என்பதை 250 ரூபாய் ஆகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியம் 100 ரூபாய் என்பதை 150 ரூபாய் ஆகவும் உயர்த்தி முதலமைச்சர் **கலைஞர்** ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் மூலம் ஓய்வூதியம் பெறும் 9,000 முன்னாள் கிராம அலுவலர்களும், 4,000 குடும்ப ஓய்வூதியம் பெறுவோரும் பயனடைவர். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவாகும்.

## வளர்ந்துவரும் தமிழ்நாடு காவல்துறையை நவீனப்படுத்திட ரூபாய் 2 கோடி அனுமதி

வளர்ந்துவரும் அறிவியல் புதுமைகளைத் துணையாகக் கொண்டு, சமூக விரோதசக்திகள் குற்றங்கள் புரிவதை உரிய காலத்தில் தடுத்து, நாட்டில் சட்டம் ஒழுங்கை முறையாகப் பராமரிப்பதற்கு, காவல்துறையில் பல நவீன வசதிகள் செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாய் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழகக் காவல்துறை, மத்திய அரசின் உதவியுடன் படிப்படியாக நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் தமிழகக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக மத்திய அரசின் உதவியோடு தமிழக அரசு மொத்தம் 3 கோடியே 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதித்தது. அதேபோல, தற்பொழுது தமிழகக் காவல்துறையை மேலும் நவீனப்படுத்தும் பணிகளுக்காக மொத்தம் 2 கோடி ரூபாய் அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

## காவலர்க்குப் பதவி உயர்வு

25.5.1998 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணி முடித்தவர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர் பதவி உயர்வு அளித்து, உதவி ஆய்வாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து பதவி உயர்வு பெறத் தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரித்துக் காவல்துறை தலைமை இயக்குநர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையினைப் பரிசீலனை செய்து தகுதி வாய்ந்த 1869 தலைமைக் காவலர்களையும் அதே போல 1974 ஆம் ஆண்டில் நேரடியாக நிலை 1 (Grade - I) காவலர்களாக நியமிக்கப்பட்டு பதவி உயர்வில் தற்போது தலைமைக் காவலர்களாகப் பணிபுரிந்து வரும் 469 நபர்களையும் சேர்த்து, ஆக மொத்தம் 2,338 நபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கி இன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதனால் நடப்பு ஆண்டில் அரசுக்கு ஏற்படும் செலவினம் ரூ.1.85 கோடியாகும்.

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில், பாமாயில் மரக்கன்றுகள் பாதி விலையில் விவசாயிகளுக்கு வழங்கிட ஏதுவாக 2.25 இலட்சம் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன. ஏற்கெனவே பாமாயில் மரச் சாகுபடிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 6 மாவட்டங்களுடன் இவ்வாண்டில், தூத்துக்குடி, நெல்லை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பாமாயில் மரச்சாகுபடித் திட்டம் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நெல்லை, கரூர் மற்றும் தஞ்சை ஆகிய இடங்களில் பாமாயில் எண்ணெய் பிழியும் ஆலைகள் அரசு உதவியுடன் விரைவில் அமைக்கப்படும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/P






